Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, MAY 25, 2021

செவ்வாய்க்கிழமை மே 25, 2021 | ஒளி: 07 கதிர்: 04 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## அமுலாகும் 11 விடயங்கள்

1. பயணக்கட்டுப்பாடுகள் ஜூன் 7 வரை நீட்டிக்கப்பட்டன.

2. பயணக்கட்டுப்பாடுகள், மே 25, மே 31 ஆம் திகதிகளிலும், ஜூன் 04 ஆம் திகதியும் காலை 04 மணி முதல் இரவு 11 மணி வரையிலும் தளர்த்தப்படும்.

தொடர்ச்சி P2

### பயணக்கட்டுப்பாடுகள்

# 10 நாள்கள் நீடிப்பு

## ஜூன் 7 வரையிலும் 3 நாள்கள் தளர்வு



நாட்டில் ஏற்பட்ட முதலாவது இரண்டாவது அலைகளின் போது நடமாடும் பொருள் விற்பனைகளைச் செய்தவர்கள், இம்முறையும் அவ்வாறே அந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். பயணக்கட்டுபாடுகளை மீறுபவர்கள், விமானப் படையினரின் ட்ரோன் கமெராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு கைது செய்யப்படுவார்கள்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, நாடு பூராகவும் அமல்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடானது, ஜூன் 7ஆம் திகதி வரை நீடிக்கப்படுவதாகத் தெரிவித்த நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக, 3 நாள்களுக்கு மாத்திரம் பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்றார்.

தொடர்ச்சி P2

## தொழிலாளியின் மகன் மீது சரமாரியாகத் தாக்குதல்

■ பா.நிரோஸ்

கஹவத்த, எந்தான தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவரின் மகன் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

தொடர்ச்சி P2

### சஜித்தின் கடமைகளை நிறைவேற்ற

## திஸ்ஸ, மத்துமபண்டார, பொன்சேகா நியமனம்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ குணமடைந்து திரும்பும் வரையில், கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக, அக்கட்சியைச் சேர்ந்த மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### புத்தளம் நகரபிதாவின் மரணம்;

## சாரதி உட்பட மூவர் கைது

■ ரஸீன் ரஸ்மின்



புத்தளம், வன்னாத்தவில்லு பகுதியில் வைத்து, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (23), திடீர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்த முன்னாள் பிரதி அமைச்சரும் புத்தளம் நகரசபைத் தவிசாளருமான கே.ஏ. பாயிஸின் மரணம் தொடர்பில், அவரது சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று, புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## 'நடந்து செல்லுங்கள்: வாகனம் வேண்டாம்'

■ மகேஸ்வரி விஜயனந்தன்

நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடுகள், இன்று (25) அதிகாலை தளர்த்தப்பட்டாலும் அத்தியாவசியப் பொருள் கொள்வனவுக்காக ஒருவர் மாத்திரமே வீடுகளிலிருந்து வெளியே செல்லலாம் எனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன, இவ்வாறு வெளியே செல்பவர்கள், வாகனங்களில் செல்ல அனுமதிப்பட மாட்டார்கள் என்பதுடன்,

தொடர்ச்சி P2



## 'தளர்வேயன்றி நீக்கமில்லை'

■ மகேஸ்வரி விஜயனந்தன்

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்த மாதம் 21ஆம் திகதி முதல் அமலுக்கு வந்த பயணக்கட்டுப்பாடானது, மூன்று தினங்களுக்குத் தளர்த்தப்படுகிறதே தவிர, முற்றாக நீக்கப்படவில்லை எனத் தெரிவித்த இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், துறைசார் அமைச்சர்கள், சுகாதார அதிகாரிகள் உள்ளிட்டவர்களுடன் நேற்று (24) இடம்பெற்ற கலந்துரையாடலில், நாட்டின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால நிலை குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதென்றார்.

தொடர்ச்சி P2

## 6 பிரிவுகள் முடங்கின

இரத்தினபுரி, காலி, கம்பஹா, நுவரெலியா ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள 06 கிராம சேவகர் பிரிவுகள் இன்று (25) அதிகாலை 04 மணிமுதல் முடக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் டயகம பொலிஸ் பிரிவு, சந்திரிகாமம் தோட்டத்தின் சந்திரிகாமம் பிரிவு, சந்திரிகாமம் தோட்டத்தின் NLDB விலங்குப் பண்ணை ஆகியனவும், இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட பொலிஸ் பிரிவு, குருவிட்ட கிராம சேவகர் பிரிவு, தெலகமுவ கிராம சேவகர் பிரிவின் நகர் பகுதி ஆகியனவும் முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, காலி மாவட்டத்தில் அம்பலாங்கொட பொலிஸ் பிரிவு, ஊரவத்த கிராம சேவகர் பிரிவு, கம்பஹா மாவட்டத்தில் கிரிபத்கொட பொலிஸ் பிரிவு, இரியவெட்டிய கிராம சேவகர் பிரிவு ஆகியனவும் முடக்கப்பட்டுள்ளன.

### கொரோனாவை ஒழிக்க

## 'பேதங்களை மறந்து ஒன்றிணைவோம்'



ஆளுங்கட்சியிலுள்ள அமைச்சர்கள், அரசியல்வாதிகள் அனைவரும், தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தியடைந்துள்ளனர் என்று தெரிவித்த முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், எதிர்காலத்திலேனும், அரசியல், கட்சி, இனம், மதம் என்ற பேதங்களை மறந்து, நாம் அனைவரும் கொரோனாத் தொற்றை ஒழிப்பதற்கான தீர்மானங்களை ஒன்றிணைந்து எடுப்போம் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### அத்தியாவசியச் சேவை புகார்களை

## 1965க்கு அறிவிக்கவும்

அத்தியாவசியச் சேவைகள் தொடர்பான பொதுப் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் அல்லது அவை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு, 1965 என்ற புதிய அவசர சேவை இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்காக, கொழும்பு மொத்த வியாபார நிலையங்களில், நேற்று (24) பொருள்களை ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (படம்: பிரதீப் பத்திரண)





### கொரோனா மரணங்களுக்கு எதிராக

## 'தடுப்பூசிகளால் உயிர்ப் பாதுகாப்பு'

உலக நாடுகளில் தற்போது பாவனையில் இருக்கும் கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளால், அந்தத் தொற்றால் ஏற்படக்கூடிய மரண வீதங்கள் பெருமளவில் குறைக்கப்படுகின்றன என்று, அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## 'கொரோனா ஒழிப்புக்கு நிதி உதவி செய்யுங்கள்'



நாட்டுக்குள் பரவியிருக்கின்ற கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த, அரசாங்கத்திடம் போதியளவு நிதியுள்ளதெனத் தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இருப்பினும் இந்த வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து வெற்றிகரமான முன்னெடுத்துச் செல்ல,

தொடர்ச்சி P2

### சஜித்துடன் தொடர்பிலிருந்த

## 15 எம்.பிக்கள் சிக்கினர்

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவுடன் தொடர்பில் இருந்த சுமார் 15 பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற வளாகத்திலுள்ள சி.சி.டி.வி கமெராக்களின் உதவியுடன் கண்டறியப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

### ஓடும் வழியில்

## பி.சி.ஆர், அன்டிஜன் சோதனைகள் நிறுத்தம்



கொரோனா வைரஸுக்கு இலக்காகியுள்ள தொற்றாளர்களைக் கண்டறிவதற்காக, பி.சி. ஆர், அன்டிஜன் ஆகிய பரிசோதனைகளைச் செய்யும் தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ ஆய்வகங்களுக்கான வழிகாட்டல்கள், சுகாதார அமைச்சால் திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව - ශ්‍රී ලංකාව
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - இலங்கை
UNIVERSITY GRANTS COMMISSION - SRI LANKA

### பல்கலைக்கழக நுழைவு;

## விண்ணப்பதாரிகளுக்கு விசேட சலுகை

2020ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள், தமது விண்ணப்பங்களை, அடுத்த மாதம்11ஆம் திகதி வரை, பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பலாம் எனத் தெரிவித்த பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இதற்காகத் தேவைப்படும் பாடசாலை சார்ந்த ஆவணங்கள், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் ஆவணங்கள் எவையும் தற்போது அனுப்பத் தேவையில்லை என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## கொரோனா மரணங்களில் குளறுபடி





கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்கள் தொடர்பில் நேற்று முன்தினம் (23) வெளியான கணக்கெடுப்பில் குளறுபடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## 'கறுப்பு பூஞ்சை இலங்கைக்கு புதிதல்ல'

இந்தியாவில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருக்கும் சில நோயாளர்களைத் தாக்கியுள்ள கறுப்பு பூஞ்சை நோய் தொடர்பில், இலங்கையிலும் தற்போது பெரிதும் பேசப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தொழிலாளியின் மகன்...

“கடந்த 10 வருடங்களாக நான் பராமரித்து வரும் தோட்டத்தில், விவசாய நடவடிக்கைகளை வழமைபோல முன்னெடுத்தேன். எனினும், அங்கு வந்த தோட்ட உதவி முகாமையாளர் என்னைக் கடுமையாக திட்டியதோடு, விசேட அதிரடிப்படையினரையும் வரவழைத்தார்” எனத் தாக்குதலுக்கு உள்ளான ரஞ்சன் குமார் (வயது 31), தமிழ்மிரருக்கு தெரிவித்தார். “5 மோட்டார் சைக்கிள்களில் 10 விசேட அதிரடிப்படையினர் தடிகளுடன் வந்திருந்தனர். அவர்களில் இருவரும் தோட்ட உதவி முகாமையாளரும் என்னைத் தாக்கினர். அத்துடன் தோட்டத்தில் நாட்டியிருந்த வாழை மரங்கள் உள்ளிட்ட கன்றுகளை பிடுங்க சொல்லியும் மிரட்டினார்கள். இதனால் அவற்றை எனது கைகளாலேயே பிடிங்கி வீசியெறிந்தேன்” எனவும் பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கஹவத்தை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. எனினும், அந்த முறைப்பாடு தொடர்பில், விசாரணைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என அறியமுடிகின்றது.

## திஸ்ஸ...

அந்த வகையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான ரஞ்சித் மத்தும பண்டார, கட்சியின் தவிசாளரும் எம்.பியுமான ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரே, இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சஜித் பிரேதமாஸ, தொலைபேசியினூடாகத் தொடர்புகொண்டு, இந்தப் புதிய பொறுப்புகளைக் கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 1965க்கு...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இயங்கிவரும் அத்தியாவசியச் சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணிக்கே, அழைப்புகள் வந்துசேரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (24) முதல், இந்த அவசர சேவை இலக்கம் செயற்படுவதாக அறிவித்துள்ள அரசாங்கம், அத்தியாவசிய சேவைகள் தொடர்பான பிரச்சினைகளை, பொதுமக்கள் இந்த இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொண்டு அறிவிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ‘கொரோனா ஒழிப்புக்கு நிதி உதவி செய்யுங்கள்’

பொதுமக்களும் தனவந்தர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், தங்களாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் உள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய, அமைச்சர் நேற்று (24) மேற்கொண்ட கண்காணிப்பு விஜயத்தின் போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்துரைத்துள்ள அவர், “கொரோனா கட்டுப்பாட்டுக்குத் தேவையான போதியளவு நிதி, அரசாங்கத்திடம் உள்ளது. நிதிப் பற்றாக்குறை இல்லை. அதேபோல் பொதுமக்களும் தனவந்தர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் நிதியுதவிகளைச் செய்தால், தொடந்து இந்தப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியுமென்றார்.

“நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதைப் பெரும்பாலான மக்கள் ஏற்றுக்கொண்டு வீடுகளுக்குள் முடங்கியுள்ள நிலையில், மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகள், எதிர்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம், என்பது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது என்றார்.

## பி.சி.ஆர், அன்டிஜன்.....

அந்த வகையில், பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைக்காகப் பெறப்படும் மாதிரிகள், உரிய பாதுகாப்பான இடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், வீதிகளில் மக்கள் நடந்து செல்லும் போதோ அல்லது வாகனங்களில் பயணிக்கும் போதோ (Walk in or drive through) இடைமறித்து அந்த மாதிரிகளைப் பெற்றுக்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளதென, அந்த வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், இந்தப் பரிசோதனைகளானவை, விசேட மருத்துவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் பரிசோதனைக்கான மாதிரிகளை வழங்கும் நபர்கள், அதற்கான அறிக்கைகள் கிடைக்கும் வரையில் தனிமைப்படுத்தப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 10 நாள்கள் நீடிப்பு

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அமைச்சர், “இந்த மாதம் 21ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருக்கும் பயணக்கட்டுபாடுகள், இன்று (25) அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்பட்டு, மீண்டும் இன்றிரவு 11 மணி தொடக்கம் அமுலுக்கு வருகிறது” என்றார்.

“இவ்வாறு அமுலுக்கு வரும் பயணக்கட்டுபாடு, 31ஆம் திகதி அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்படும். மீண்டும் அன்று (31) இரவு 11 மணிக்கு அமுல்படுத்தப்படும் பயணக்கட்டுபாடு, ஜூன் மாதம் 4ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டு, அன்றைய தினம் இரவு 11 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்பட்டு, ஜூன் மாதம் 7ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கே தளர்த்தப்படும்.

“பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் நாள்களில், வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரமே அத்தியாவசியப் பொருள் கொள்வனவுக்காக வெளியே செல்ல முடியும் என்பதுடன், அவ்வாறு செல்பவர்கள், தமது வீடுகளுக்கு அருகில் இருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு மாத்திரமே செல்ல முடியும்” என்றும் குறிப்பிட்டார்.

விவசாயிகள் உணவு உற்பத்திகளைச் செய்தால் மாத்திரமே நாட்டு மக்கள் உண்ணலாம் என தெரிவித்த அமைச்சர், எனவே, விவசாயிகள் தமது உற்பத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்றும் நடமாடும் வாகனங்கள் மூலமாக விவசாயிகளது உற்பத்தி பொருள்கள்களைக் கொள்வனவு செய்து, பொதுமக்களுக்கு விநியோகிக்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்ட முதலாவது இரண்டாவது அலைகளின் போது நடமாடும் பொருள் விற்பனைகளைச் செய்தவர்கள், இம்முறையும் அவ்வாறே அந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம் என்றும் குறிப்பிட்ட அமைச்சர், ஏற்றுமதிச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அனுமதியுண்டு என்றார்.

அத்துடன், நாளை (26), 27 மற்றும் 28ஆம் திகதிகளில், பேலியாகொட மீன்சந்தை மூடப்படும் என மீன்பிடி இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அனைத்துத் தீர்மானங்களும், மக்களைப் பாதுகாக்கவே எடுக்கப்படுகின்றன என்றார்.

“வாகனங்கள் பயணிக்க அனுமதி வழங்கினால், பயணக்கட்டுபாடுகளை விதிப்பதில் அர்த்தமில்லை. எனவே மக்களது உயிர்களைப் பாதுகாக்க அதிகூடிய ஒத்தழைப்பை எமக்கு தாருங்கள்” என்றும் வலியுறுத்தினார்.

பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள தினங்களில், மதுபானசாலைகள் முழுமையாக மூடப்படும் எனத் தெரிவித்த அமைச்சர், பயணக்கட்டுபாடுகளை மீறுபவர்கள், விமானப் படையினரின் ட்ரோன் கமெராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு கைது செய்யப்படுவார்கள் என்றார்.

## ‘தளர்வேயன்றி நீக்கமில்லை’

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், “21ஆம் திகதி முதல் பயணக்கட்டுபாடு அமுல்படுத்தப்பட்டதால், மக்கள் தமக்கு தேவையான பொருள்களை, இன்று (25) வரை மாத்திரமே கொள்வனவு செய்திருப்பர். எனவே, அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகவே, இன்று பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன“ என்றார்.

பிரதேச செயலாளர்கள் ஊடாக அந்தந்த பிரதேசங்களில் உள்ள உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் விற்பனை செய்யப்படும் வர்த்தக நிலையங்கள் குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றைத் தவிர ஏனைய வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதியில்லை.

“தற்போது வரை முடக்கப்பட்டுள்ள சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டாலும், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்கள் வெளியில் செல்ல அனமதிக்கப்பட மாட்டார்கள். தமது வீடுகளுக்கு அருகில் வரும் நடமாடும் வாகனங்கள் மூலம், உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

“மேலும், பயணக்கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ள நாட்களில், வங்கி நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படலாம். ஆனால், குறைந்தளவு ஆளணியுடனேயே வங்கிச் சேவைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சதொச மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படாத தினங்களிலும் திறந்திருக்கும் என்பதுடன், நடமாடும் சேவை மூலம் பொருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என, இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

## ‘பேதங்களை மறந்து...

கொழும்பில் நேற்று (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், “எமது நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட கல்வித்துறைசார் புதிய வேலைத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 13 வருடக் கல்விக்கு நிதியொதுக்க முடியாத நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது” என்றார்.

கடந்த ஒன்றரை வருடங்களாக, மாணவர்களுக்கு முறையான கல்வித் திட்டம் இல்லை. அன்று மாணவர்களுக்கு டெப்களை வழங்க நடவடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிராக தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததால், அதன்மூலம் மாணவர்களுக்கு கிடைக்கவிருந்த பயன்கள் இன்று இல்லாமல் போயுள்ளன.

“அனைத்து மாணவர்களுக்கும் கல்வி கற்கும் உரிமை இருக்கிறது. இருப்பினும், சகல மாணவர்களாலும், கணினி, டெப், ஸ்மார்ட் போன்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறான மாணவர்களுக்காக, அரச தொலைகாட்சி சேவைகளைப் பயனடுத்தும் நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஆனால், இன்று அவ்வாறான எந்தவொரு வேலைத்திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. “கொரோனாவை கட்டுப்படுத்தல், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. இதற்கான வேலைத்திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லையென மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். குறிப்பாக, நாட்டை முடக்கும் விடயத்தில்கூட அரசாங்கத்திடம் உரிய வேலைத்திட்டம் இல்லை என்பதை மக்கள் நன்கு அறிந்துகொண்டுள்ளனர் என்று” அகிலவிராஜ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ‘தடுப்பூசிகளால் உயிர்ப் பாதுகாப்பு’

உலக நாடுகளில் தற்போது பாவனையில் இருக்கும் கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளால், அந்தத் தொற்றினால் ஏற்படக்கூடிய மரண வீதங்கள் பெருமளவில் குறைக்கப்படுகின்றன என்று, அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விஞ்ஞானிகளால் செய்யப்பட்டுள்ள ஆய்வொன்றின் போதே, இந்த விடயம் தொடர்பில் கண்டறியப்பட்டுள்ளது.

ஃபைஸர், மொடர்னா, ஜொன்சன் அண்ட் ஜொன்சன், சினோவெக் மற்றும் சைனொஃபாம் ஆகிய அனைத்துத் தடுப்பூசிகளாலும், கொரோனா மரணங்கள் தடுக்கப்பட்டு, பொதுமக்கள் பாதுகாக்கப்படுகின்றனர் என்றும், விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், உலக நாடுகளில் தற்போது திரிபடைந்துள்ள கொரோனா வைரஸ்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய உயர்ந்த எதிர்ச் சக்திகளை, ஃபைஸர் தடுப்பூசி கொண்டிருக்கிறது என்றும், அவர்கள் குறிப்பிட்டுள்ளதாக, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## 15 எம்.பிக்கள் சிக்கினர்

இதன்படி, அவர்கள் அனைவரையும் சுயதனிமையில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ள பாராளுமன்றத்தின் பிரதம படைக்களச் சேவிதர், பி.சி.ஆர் பரிசோதனையையும் மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளார் என, பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல், பாராளுமன்ற பணிக்கு உறுப்பினர்கள் சிலரும், எதிர்க்கட்சித் தலைவருடன் தொடர்பில் இருந்துள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ள நிலையில், அவர்களும் தனிமைப்படுத்தலுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார்கள் என்ற அடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர், சுயதனிமைப்படுத்தலுக்கு இலக்காகியுள்ளனர்.

## ‘கறுப்பு பூஞ்சை...

அம்பாறை மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்த நபரொருவர், இந்த கறுப்பு பூஞ்சை நோய்க்கு இலக்காகியிருந்தார் என்ற தகவலை அடுத்தே, இந்நோய் தொடர்பான அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், 2019ஆம் ஆண்டு முதலே, கறுப்பு பூஞ்சை நோய்க்கு இலக்கான நோயாளிகள் பலர், இலங்கையிலிருந்து கண்டறியப்பட்டுள்ளனர் என்று, இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில், ச கருத்துத் தெரிவித்த தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூஞ்சை நோய்கள் தொடர்பான பிரிவின் தலைவியும் விசேட வைத்திய நிபுணருமான பிரிமாலி ஜயசேகர, “இலங்கையில் கண்டறியப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்களுக்கு, இந்நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கவில்லை. 2021இல் இதுவரையான காலத்தில், 24 நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். இருப்பினும், இவர்களில் எவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கவில்லை. எமது மண்ணிலும் அது படர்ந்திருக்கின்றது. நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்களையே, இந்நோய் பற்றிக்கொள்கிறது என மேலும் தெரிவித்துள்ளார்.

## அமுலாகும் 11 விடயங்கள்

3. கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்போது பல்பொருள் அங்காடிகள், மளிகைக் கடைகள், பேக்கரிகள், பழம் மற்றும் காய்கறி கடைகள், மீன் மற்றும் இறைச்சி கடைகள் மற்றும் மருந்தகங்கள் மட்டுமே திறந்திருக்க அனுமதிக்கப்படும்.
4. பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்போது மதுபானக் கடைகள் மூடப்படும்.
5. பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்போது அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்ய, ஒரு வீட்டிலிருந்து ஒருவரை வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவர்.
6. பொதுமக்கள் தங்கள் குடியிருப்புக்கு மிக அருகில் உள்ள கடைகளில் பொருள்களை கொள்வனவு செய்யலாம்.
7. உணவு, காய்கறி மற்றும் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் லொரிகள், பயணக் கட்டுப்பாடுகளின் போதும் அனுமதிக்கப்படும்.
8. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட காலகட்டத்தில் பொதுப் போக்குவரத்துகள் தொடர்ந்து கட்டுப்படுத்தப்படும்.
9. அத்தியாவசிய சேவைகள் மற்றும் விநியோக சேவைகள் மட்டுமே கட்டுப்பாடுகளின் போது செயல்பட அனுமதிக்கப்படுகின்றன.
10. வீட்டிலிருந்து வெளியேறுவது முதல், சுகாதார வழிகாட்டுதல்களை கடுமையாக கடைபிடிக்குமாறு பொதுமக்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.
11. பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்போது தேசிய அடையாள அட்டை (தே.அ.அ) இறுதி இலக்க முறைமை நடைமுறைக்கு வராது.

## சாரதி உட்பட மூவர் கைது

வன்னாத்தவில்லு - இறால்மடு பிரதேசத்தில் உள்ள புத்தளம் நகர சபையின் தலைவருக்குச் சொந்தமான தோட்டத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே, இந்த விபத்து சம்பவித்துள்ளது.

புத்தளம் நகர சபைக்குச் சொந்தமான கெப் ரக வாகனத்தில் நகர பிதா உள்ளிட்ட நால்வர் பயணித்துள்ளனர். இதன்போது, புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸ், கெப் ரக வாகனத்தின் பின்பக்கம் (திறந்த) அமர்ந்துப் பயணித்துள்ளார் என்றும் கெப் வண்டியின் சாரதி, உள்வீதியிலிருந்து எலுவன்குளம் பிரதான வீதியை நோக்கி வாகனத்தைச் செலுத்த முற்பட்ட போதே, நகர பிதா கீழே விழுந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸின் தலையில் பலத்த காயங்களுடன் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்துவிட்டதாக, இதுவரை மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த புத்தளம் நகர பிதாவின் ஜனாஸா புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் ஜனாஸா குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## ‘நடந்து செல்லுங்கள்: வாகனம் வேண்டாம்’

இவர்களின் வாகனங்களை நகரங்களில் தரித்து வைக்க அனுமதியும் வழங்கப்படாதென்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக, அடையாள அட்டையைக் கொண்டு செல்வது அவசியம் என்று குறிப்பிட்ட அவர், வைத்தியர்களுக்கே உரிய போலி இலட்சினைகளைப் பொருத்திய வாகனங்கள் சட்டவிரோதமாகப் பயணிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இது குறித்து தீவிரமாகப் பரிசோதனை செய்ய, விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதிகளவான சிவில் மற்றும் அதிகளவான பொலிஸார் வீதித்தடை கண்காணிப்புகளில் ஈடுபடவுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

எனவே, விசேடமாக வைத்திய இலட்சினையுடன் பயணிக்கும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு பரிசோதனை செய்யப்படும் என்பதுடன், இதற்கு வைத்தியர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## விண்ணப்பதாரிகளுக்கு...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், “தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள தொற்றுப் பரவல் நிலைமை காரணமாக விதிக்கப்பட்டுள்ள பயணத் தடைகளுக்கு மத்தியில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால், பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான பாடசாலைசார் ஆவணங்கள், அதிபரின் கடிதம் உள்ளிட்ட எவற்றையும் பரீட்சார்த்திகளால் பெற்றுக்கொள்ள முடியாது. அதேபோல், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்த, கிராம உத்தியோகத்தரின் கடிதத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. எனவே, பரீட்சார்த்திகள் இணையவழி ஊடாக கேட்கப்பட்டுள்ள விபரங்களைச் சரியாக பூரத்தி செய்த விண்ணப்பங்களை அனுப்ப முடியும்” என்றார்.

எனினும், நாட்டின் நிலைமை வழமைக்குத் திரும்பி, பாடசாலைகள் திறக்கப்பட்டதும், ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களை, பரீட்சார்த்திகள் கையளிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கொரோனா மரணங்களில் குளறுபடி

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன், நேற்று முன்தினம் (23) வெளியிடப்பட்ட அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில், 32 இறப்புகள் பதிவாகியிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும், இந்த மரண எண்ணிக்கையை மறுத்துள்ள ஜெனரல் ஷவேந்திர சில்வா, நேற்று முன்தினம் (23), 5 மரணங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளதாகத் தெரிவித்ததுடன், ஏனைய 27 மரணங்களும், நேற்றைய தினத்துக்கு முன்னர் பதிவானவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சுவசெரியவில் வருபவர்களை

# ‘30 நிமிடங்களுக்குள் அனுமதிக்கவும்’

சுவசெரிய அம்பியுலன்ஸ்களில் வைத்தியசாலைகளுக்கு அழைத்துவரப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், குறைந்தது 30 நிமிடங்களுக்குள் வைத்தியசாலைக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், சுவசெரியவில் அழைத்துவரப்படும் தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றார்.




எனவே, இவ்வாறு அழைத்து வரப்படும் தொற்றாளர்களை 30 நிமிடங்களுக்குள் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும். தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதை நிராகரிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

வைத்தியசாலைக்குள் தொற்றாளர்கள் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், தேவை ஏற்படும் பட்சத்தில் அவர்களை மேலதிக சிகிச்சைகளுக்காக கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயற்பாட்டுக்கு

# பொதுசுகாதார பரிசோதகர்கள் கண்டனம்





அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறவினர்களுக்கு மாத்திரம் கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்துவதற்கான சுகாதார அமைச்சின் செயற்பாடுகளைக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், இதுபோன்ற செயற்பாடுகளுக்கு பொதுச் சுகாதார பரிசோதர்கள் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அச்சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மேல்மாகாணத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரது உறவினர்கள் ஐவருக்குக் கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், அதன் உறுப்பினர்களின் குடும்ப உறவினர்களுக்கு மாத்திரம் இவ்வாறு தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுத்த சுகாதார அமைச்சின் செயற்பாட்டைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் குடும்பத்தினருக்கு தடுப்பூசிகளை செலுத்துவதற்கு நேற்று (24) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தடுப்பூசி செலுத்தும் நிகழ்வுகளில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை எனவும் கூறிய அவர், தடுப்பூசி செலுத்துவததாக இருந்தால் ஒரு சாராருக்கு மாத்திரம் தடுப்பூசிகளை செலுத்தாது, அனைத்துத்தரப்பினருக்கும் தடுப்பூசிகளைச் செலுத்த வேண்டும் என்றார்.

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வரும் பொதுச் சுகாதார பரிசோதர்கள், தாதியர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் தற்போது ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள். எனவே சுகாதார ஊழியர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்படுமெனத் தான் நம்பிக்கைக் கொள்வதாகவும் தெரிவித்தார்.



## கொரோனா செய்தி துளிகள்

- பூஸா சிறைச்சாலையின் கைதிகள் 60 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
- பேராதனை போதனா வைத்தியசாலையின் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.
- கடந்த வாரத்தில் மாத்திரம் 249 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் மரணமடைந்துள்ளனர்.
- நான்கு மாவட்டங்களில் மேலும் 6 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

‘ஆசிரியர்களுக்கான

# நிபந்தனைகள் நீக்கப்பட வேண்டும்’

இரா.யோகேசன்



ஆசிரியர்களின் பிள்ளைகளை அவர்கள் பணிப்புரிம் பாடசாலைகளிலேயே சேர்ப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கல்வி அமைச்சுக்கு முக்கிய வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளதாக அச்சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், கல்வி அமைச்சு விதித்துள்ள நிபந்தனையால் ஆசிரியர்கள் மேலும் துன்புறுத்தப்படுவதால் இந்த நிபந்தனையை உடனடியாக நீக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பாக ஒரு தேசிய அல்லது மாகாணப் பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியர் பத்து வருட சேவையை முடித்த பின்னர் அல்லது தனிப்பட்ட காரணங்களால் இடமாற்றம் காரணமாக அவர்களுடைய பிள்ளைகள், அவர்கள் பணிபுரியும் பாடசாலையில் சேர வாய்ப்பைக் கேட்டுக்கொள்வதற்கு காரணம், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கலாகும். இதேவேளை, காலையில் 7.30 மணிக்கு முன்பு பாடசாலைக்கு வருகைத்தருவதும் மதியம் 1.30 மணிக்கு பின்பும் பாடசாலையில் நடைபெறும் மேலக பாடநெறி, செயற்பாடுகள் காரணமாக அவர்கள் எதிர்கொள்ளும் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்குமாக பெறும் வாய்ப்பாகும். இது ஒரு சிறப்புச் சலுகை அல்ல என்பதையும் வலியுறுத்த வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தீயை அணைக்க

# நெதர்லாந்திலிருந்து விசேட விமானம்



சரக்குக் கப்பலில் பற்றி எரியும் தீயைக் கட்டுப்படுத்த முடியுமெனத் தான் நம்புவதாகத் தெரிவித்த அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, இத்தீயை அணைப்பதற்காக நெதர்லாந்திலிருந்து விசேட விமானமொன்று நாட்டுக்கு வர உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கொழும்பு துறைமுகத்துக்கு வெளியில் நங்கூரமிட்டுள்ள நிலையில் தீப்பற்றியுள்ள, *X-Press Pearl* என்ற சரக்குக் கப்பலின் தீயை அணைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கடற்படையினர் முன்னெடுத்து வருகின்றனர். கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொண்டு இத்தீயைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

இதேவேளை, தீ பரவலுக்குள்ளான கப்பலின் வெப்ப நிலை சாதாரணமானதாகவும் கட்டுப்படுத்தக்கூடிய ஒன்றாகவே காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், கப்பலில் தீப்பற்றி எரியும்போது, அதனை அணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் நவீன உபகரணங்களுடன் நெதர்லாந்திலிருந்து விசேட விமானம் நாட்டுக்கு வர உள்ளதாகவும் தெரிவித்தார்.

> **கப்பலின் வெப்ப நிலை சாதாரணமானதாகவும் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் காணப்படுகிறது. தீயை அணைப்பதற்கு நவீன உபகரணங்களுடன் நெதர்லாந்தில் இருந்து விசேட விமானம் வருகிறது**

இத்தீப்பரவலைக் கட்டுப்படுத்த முடியுமெனத் தான் நம்புவதாகவும், இத்தீப்பரவல் கப்பலின் ஏனைய பகுதிகளுக்குப் பரவுமாக இருந்தால் அதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

‘ஆடைத் தொழிற்சாலை

# ஊழியர்களுக்கு தடுப்பூசி வேண்டும்’



பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவுள்ள ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவரும் தனியார் ஆடைத்தொழிற்சாலைக்கு நேற்று (24) திடீர் விஜயம் செய்த சாணக்கியன், அங்கு நிலைமைகளை ஆராய்ந்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பலரின் வேண்டுகோளுக்கு அமைய மட்டக்களப்பில் இயங்கி வரும் தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டதாகவும், அங்கு சுமார் மூவாயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர் என்றும் கொரோனா பயணத்தடை காலகட்டத்திலும் இவர்கள் இங்கு பணியாற்றி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆடைத்தொழிற்சாலையானது உள்நாட்டு வருமானத்திலும் அனைத்து ஊழியர்களின் குடும்ப வாழ்வாதாரத்திலும் முக்கிய பங்காற்றுவதாகத் தெரிவித்த அவர், ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

# வைத்தியர்களின் உறவினருக்கு இரகசியமாகத் தடுப்பூசி



சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்படாது, வைத்தியர்களின் உறவினர்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்படுவதாகக் குற்றஞ்சுமத்தும் முருத்துட்டுவே ஆனந்த தேரர், சுகாதார ஊழியர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் தடுப்பூசியை முதலில் செலுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை சுகாதார அதிகாரிகளுக்கும், அவர்களது பிள்ளைகள், உறவினர்களுக்கு முதலில் வழங்க வேண்டுமெனத் தாம் அரசாங்கத்திடம் ஆரம்பத்திலிருந்தே கோரிக்கை விடுத்து வருகின்றேன். ஆனால் அதற்கு செவி சாய்க்கவில்லை.

ஆனால், தற்போது வைத்தியர்கள் ஒரு பட்டியலொன்றைத் தயாரித்து, அவர்களது உறவினர்களுக்குத் தடுப்பூசிகளை வழங்க ஆரம்பித்துள்ளதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. எனினும், இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு எந்தவிதமான அறிவிப்புகளும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும், தடுப்பூசிகளை செலுத்துவதற்குப் பொருத்தமான முறையொன்றைத் தயாரிக்க வேண்டும். குப்பை அள்ளுபவர்கள் முதல் அவர்களுக்கு மேலுள்ளவர்கள் வரையில் தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும். ஆனால், தற்போது நாட்டில் என்ன நடக்கிறதென்றால், முடிந்தவர்கள் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்கிறார்கள். முடியாதவர்கள் தடுப்பூசிகள் பெற முடியாது இருக்கிறார் என்றார்.

சிவாகம முத்தாமணி சிவஶ்ரீ

# ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் காலமானார்

இலங்கையின் மூத்த சிவாச்சாரியார்களில் ஒருவரான சிவாகம முத்தாமணி சிவஶ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் நேற்று (24) இறைவனடிச் சேர்ந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 85 ஆகும்.

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் குரு முதல்வராகவும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆதீனத்தின் பிரதம குருவாகவும் இறைபணியாற்றிய சிவஶ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் குருபீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

பல நூற்றுக்கணக்கான கும்பாபிஷேகங்களையும் சங்காபிஷேகங்களையும் மஹோற்சவக் கிரியைகளையும் முதன்மை குருவாக இருந்து பல தேசங்களிலும் ஆகம முறைப்படி நடத்தி சைவத் தமிழ் உலகிலும் அந்தண சமூகத்திலும் நிகரற்ற மதிப்பை சிவாச்சாரியார் பெற்றிருந்தார்.

பன்மொழிப் புலமை மிக்கவரான மகேஸ்வர சிவாச்சாரியார், யாழ் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

ஶ்ரீ சக்கர யந்திர பூஜை பற்றிய நூலை எழுதியுள்ள சிவாச்சாரியார், ஆனைப்பந்தியில் அந்தணர்களுக்கான குருகுல உருவாக்கத்திலும் முனைப்புக்காட்டியதுடன், குருகுலத்தில் அந்தண மாணவர்களுக்கு சமஸ்கிருதம் மற்றும் ஆகம வகுப்புகளுக்குச் சிறந்ததோர் வழிகாட்டியாக இருந்து பணியாற்றினார்.

சிவாச்சாரியாரின் மறைவு அந்தண சமூகத்திற்கும் இந்துக்களுக்கும் பேரிழப்பென புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ வின் இந்து மத அலுவல்களுக்கான இணைப்பாளர் சிவஶ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா இரங்கல் தெரிவித்துள்ளார்.

“அவரது இழப்பு சைவத் தமிழ் உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்” இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விவகாரம்;

# ‘தமிழ் பிரதிநிதிகளின் ஒற்றுமை ஆரோக்கியமான ஆரம்பப் புள்ளி’

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் தொடர்பில் கட்சி, கொள்கை பேதம் கடந்து, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத் தரப்புடன் கலந்துரையாடியுள்ளமை தமக்கு சிறு ஆறுதலைத் தருவதாக தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்கள்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுடன், முதற்கட்ட பேச்சுவார்த்தையை மேற்கொண்டுள்ளார்கள்.

“சிறையில் வாடும் எமது உறவுகளின் விடயத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் எடுத்துள்ள ஆரோக்கியமான செயற்பாட்டின் ஆரம்பப் புள்ளியாகவே நாம் காண்கின்றோம். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது, ஆளும் அரசாங்கத்தின் அரசியல் விருப்பத்திலேயே தங்கியுள்ளது. விடுதலையை வென்றெடுக்க வேண்டுமாயின் நாம் வேறெங்கும் பேசிப் பயனில்லை. நாட்டின் சட்டம், நீதி எனும் காரணப்பெயருக்குள் கட்டுண்டவர்களாக கைதிகள் காணப்படுகிறார்கள். இவ்வாறு அணிசேர்ந்து மக்கள் பணியாற்றும் கைங்கரியமானது அரசாங்கத்துக்கும் இதர தரப்புகளுக்கும் ஒருமித்த மக்களின் பல பிரயோகத்தையும் அவர்களின் விருப்பத்தையும் புரிய வைப்பதாக அமையலாம்.

அரசியல் கைதிகளை நேரடியாகச் சிறைக்குச் சென்று பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை முழுமை பெறுமானால் அது அரசுக்கு சாதகமான பலனையே தரும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் அரசு அதீத கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும் எனவும் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில்;

# ஒட்சிசன் சிலிண்டர்களை திருடியவர் சிக்கினார்



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒட்சிசன் சிலிண்டர்களை திருடும் மோசடியில் ஈடுபட்டுவந்த அந்த வைத்தியசாலையின் இருதயவியல் பிரிவின் தீவிர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றிய வந்த ஊழியர் ஒருவர் மருதானைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 43ஆம் இலக்க வார்ட்டில் களஞ்சியப்படுத்தப்படும் ஒட்சிசன் சிலிண்டர்கள் இரண்டை குறித்த நபர் திருடிச் சென்றதாக, அந்த வார்டில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், தூக்கிச் சென்ற இரு சிலிண்டர்களுடன் சந்தேக நபர் வைத்தியசாலை வளாகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து அவருக்கு உதவியாக இருந்த மற்றொரு ஊழியரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பில்

# 4,000 பேருக்கு பி.சி.ஆர்?

செ.கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு ஆடை தொழிற்சாலையால், முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும் 'கொரோனாக் கொத்தணி' உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில், அதைத் தடுப்பதற்கான தயார்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தில், மருத்துவ ரீதியான பாதுகாப்பில் வளப்பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில், அவற்றை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், மாவட்டத்தில், அன்டிஜன் சோதனையில் தொற்று இல்லை என்ற முடிவு கிடைக்கப் பெற்றவர்கள் உட்பட, குறித்த ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றியவர்களில் தொற்றாளர்களாகக் கண்டறியப்பட்டவர்களின் குடும்பங்கள், முதல் தொற்றாளர்கள் என சுமார் 4,000 பேருக்கு, பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது.

மேலும், தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, திம்பிலி கொரோனா வைத்தியசாலையும் வேணாவில் வைத்தியசாலையும் தயார் நிலையில் உள்ள அதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை, மாங்குளம் வைத்தியசாலை என்பனவும் மருத்துவ ரீதியான தயார்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தோப்பூரை முடக்கவும்

ஹஸ்பர் ஏ ஹலீம், அப்துல்சலாம் யாசீம், தீஷான் அஹமட், ஏ.எம்.ஏ.பரீட்

கொவிட்- 19 தொற்று வேகமாகப் பரவிவரும் தோப்பூர் பிரதேசம், உடனடியாக முடக்கப்பட வேண்டுமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், திருகோணமலை மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

'தோப்பூர் பிரதேசத்தில் கடந்த வாரம் முதல், கொவிட் - 19 தொற்று வேகமாகப் பரவி வருகிறது. மூன்றாம் அலையில், இதுவரை 117 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன், கடந்த 8 நாள்களில் மட்டும் 82 தொற்றாளர்கள் இனங்காணப்படுள்ளமை இப்பகுதியில் தொற்று வேகமாகப் பரவி வருகிறது என்பதைக் காட்டுகிறது.

இதில் அல்லை நகர் மேற்கில் 37 தொற்றாளர்களும் அல்லை நகர் கிழக்கில் 36 தொற்றாளர்களும் தோப்பூரில் 33 தொற்றாளர்களும் இக்பால் நகரில் 05 தொற்றாளர்களும் பாலதோப்பூரில் 06 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.



சுமார் 14,000 மக்கள் வாழும் பகுதியில் குறுகிய காலத்தில் 117 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை இப்பகுதியின் அபாய நிலையைக் காட்டுகிறது.

இப்பிரதேசத்தை இதுவரை முடக்காமல் இருப்பது தொற்று மேலும் பரவவே வழி வகுக்கும். எனவே, இப்பிரதேசத்தை முடக்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதேச சிவில் சமூகத்தினர் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தை உடனடியாக முடக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு' என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தவிசாளர் தணிகாசலத்துக்கு கொரோனா

க. அகரன்

வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் ச.தணிகாசலத்துக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அண்மையில், வவுனியா வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு எழுமாறான வகையில், அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து, வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து தவிசாளர் ச.தணிகாசலத்துக்கு அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போதே, அவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் ஒருவரின் பெயரை பயன்படுத்தி

## தருமபுரம் வைத்தியசாலை காணி அபகரிப்பு

நடராசா கிருஸ்ணகுமார்

அமைச்சர் ஒருவரின் பெயரைப் பயன்படுத்தி, கிளிநொச்சி, தருமபுரம் பிரதேச வைத்தியசாலையின் காணியை, தனியார் இருவர் அடாத்தாகப் பிடித்துள்ளதாக, தருமபுரம் பொலிஸ் நிலையத்தில், நேற்று (24) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தருமபுரம் பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்தால், இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு அருகில் குடியிருக்கும் குடும்பமொன்று, வைத்தியசாலையின் காணியை உரிமை கோரிய போது, நீதிமன்றத்தாலும் பிரதேச செயலகத்தாலும் அரை ஏக்கர் காணி ஏற்கெனவே வழங்கப்பட்டு, பிரச்சினை தீர்க்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது அமைச்சர் ஒருவரின் பெயரைப் பயன்படுத்தி, காணிகளின் எல்லையை நகர்த்தி, வைத்தியசாலையின் காணியை அடாத்தாகப் பிடிப்பதுடன், வைத்தியசாலையின் காணியில் காணப்பட்ட தென்னைகளில் இருந்த தேங்காய்களையும் பிடுங்கி எடுப்பதாக, வைத்தியசாலை நிர்வாகத்தினர், தங்களது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர்.



சிகிச்சை நிலையத்துக்கு

## கட்டில்கள் வழங்கல்

எம்.எஸ்.எம். ஹனீபா

அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை கொவிட்-19 சிகிச்சை நிலையத்துக்கான 20 கட்டில்கள், நேற்று (24) வழங்கிவைக்கப்பட்டன.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டபிள்யூ.டி. வீரசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, கட்டில்களை வழங்கி வைத்தார்.

இதில் பொதுஜன பெரமுனவின் அக்கரைப்பற்று அமைப்பாளரும், இராஜாங்க அமைச்சர் விமல வீர திஸாநாயக்கவின் இணைப்புச் செயலாளருமான ஏ.எம். நிஹால், கல்முனை அமைப்பாளர் நிஸ்லி முஸ்தபா, ஆயுர்வேத தள வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி டொக்டர் பீ.எம். றதீஸ், ஆயுர்வேத வைத்திய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்படுபவர்களை வேறு மாவட்டங்களுக்குக் கொண்டு சென்று சிகிச்சை வழங்காமல் இம்மாவட்டத்திலேயே சிகிச்சை வழங்குவதற்கு அம்பாறை மாவட்டத்தில் புதிதாக பல கொரோனா சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

இதற்கமைய, அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை, கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

மத தலங்களில்

## ஒன்றுகூடினால் சட்டம் பாயும்

எம்.எஸ்.எம். ஹனீபா



கிழக்கு மாகாணத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, மத தலங்களில் ஒன்றுகூடுபவர்களைக் கைதுசெய்து, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர். எம். தௌபீக், நேற்று (24) தெரிவித்தார்.

பயணத்தடை விதிக்கப்பட்டு, தனிமைப்படுத்தல் சட்டம் அமலில் உள்ள போதிலும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, பள்ளிவாசல்கள், விகாரைகள், கோவில்கள், தேவாலயங்கள் ஆகியவற்றில் ஒன்றுகூடுபவர்கள் கைது செய்யப்படுவதோடு, அதன் நிர்வாகிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களைக் கைது செய்வதற்கு பொலிஸ், இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதாரத் துறையினாலும், பொலிஸாராலும் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் செயற்படுமாறு, பொதுமக்களை அவர் மேலும் கேட்டுள்ளார்.

புதிய சிகிச்சை நிலையத்தில்

## 80 பெண் தொற்றாளர்கள் சிகிச்சை



எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையத்தில், தற்போது வரை 80 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக, மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில், நேற்று (24) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், மன்னார் மாவட்டத்தில் கடந்த 2 தினங்களில், 23 நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டு உள்ளதாகத் தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட்டவர்கள், ஏற்கெனவே கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களாகவும் ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் பணியாளர்களாகவும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களாகவும் காணப்படுகின்றனர் என்றார்.

அத்துடன், இந்த மாதம் தற்போது வரை 2,072 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகத் தெரிவித்த அவர், இவற்றில் 412 பி.சி. ஆர் பரிசோதனைகளின் முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டு உள்ளனவெனவும் கூறினார்.

மேலும், மன்னார், தாரபுரம், துருக்கி சிட்டி பகுதியில் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்ட பெண்களுக்கான கொரோனா இடைநிலை சிகிச்சை நிலையத்தில், தற்போது வரை 80 கொரோனா தொற்றாளர்கள் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் மன்னார், வவுனியா, மேல் மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் அனைவரும் இந்த வார இறுதியில் தமது சிகிச்சைகளை நிறைவு செய்து கொண்டு, வீடுகளுக்குச் செல்ல உள்ளனரெனவும், டொக்டர் ரி. வினோதன் தெரிவித்தார்.

## கட்டுப்பாட்டுடன் பொங்கல் விழா

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலின் வருடாந்த வைகாசி விசாக பொங்கல் நிகழ்வு, நேற்று (24), அனுமதிக்கப்பட்ட நபர்களுடன் நடைபெற்றது.




இதன்போது, கோவிலுக்குச் செல்லும் இரண்டு பிரதான வீதிகளிலும் சோதனைச் சாவடிகள் அமைத்து, பொலிஸாரும் படையினரும், தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டதுடன், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் பூஜைகள் நடைபெற்றன.

கண்காணிப்பு காரணமாக, கோவிலுக்கு நேர்த்திக்கடன் செலுத்தவோ கோவிலில் வழிபாடுகளை மேற்கொள்ளவோ, பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

குறிப்பாக, நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக வந்த பக்தர்களை, புதுக்குடியிருப்பு - கேப்பாபிலவு வீதியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து, படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

அனுமதிக்கப்பட்ட 51 பேர் மாத்திரம் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன், கோவிலை அண்மித்த பகுதிகளில் உள்ள மக்கள் சிலர், கோவில் வளாகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில், அவர்கள் கோவிலுக்குச் செல்லும் வீதி சந்திகளில், தேங்காய் உடைத்து, தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றினர்.

பொலிஸார், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் பூஜைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

றிஷாட் பதியுதீனுக்கு


## ஆதரவாக சுவரொட்டிகள்

பாறுக் ஷிஹான்

முன்னாள் அமைச்சர் றிஷாட் பதியுதீன் கைது செய்யப்பட்டு, இன்றுடன் ஒரு மாதம் நிறைவுபெற்றதை தொடர்ந்து, அவருக்கு ஆதரவாக, அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டியில் அவரை விடுதலை செய்ய வலியுறுத்தியும் விரைவான விடுதலை கிடைக்க ஆவன செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


பிரதான வீதிகள், உள் வீதிகளில் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளதுடன், குறிப்பாக மருதமுனை, நற்பிட்டிமுனை, கல்முனைகுடி, இஸ்லாமாபாத், சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, சவளக்கடை, மத்தியமுகாம், பொத்துவில் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.



கண்ட இடத்தில்

## கழற்றி வீசப்படும் முகக்கவசங்கள்

எச்.எம்.எம்.பர்ஸான்



கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற முகக்கவசம் அணிவது கட்டாயமாகும். குறித்த முகக்கவசத்தை ஒருவர் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்; பாவித்த முகக் கவசத்தை எப்படி அகற்றி, அப்புறப்படுத்த வேண்டும் என்ற அறிவுறுத்தல்களை சுகாதாரப் பிரிவினர் வழங்கி வருகின்றனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், பயன்படுத்திய முகக் கவசங்களை கண்ட கண்ட இடத்தில் பலர் வீசிச் செல்கின்றனர். இதனால், ஒருவேளை முகக் கவசங்களை பயன்படுத்தியோர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருந்தால், இவ்வாறு பொது இடங்களில் வீசப்படும் முகக் கவசங்கள் மூலம், ஏனையோருக்கும் தொற்றுகள் ஏற்படக் கூடும் என மக்கள் அச்சப்படுகின்றனர்.

மேற்படி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீதிகள், வடிகான்கள், சந்தைப் பகுதிகள் உட்பட சனநடமாட்டம் உள்ள இடங்களில், பொறுப்பற்ற விதத்தில் முகக் கவசங்கள் வீசிக் காணப்படுகின்றன.

இவ்வாறான நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

நீரோடையில் விழுந்து

## இரண்டு வயதுச் சிறுமி பலி

ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிராஜ் நகர் பகுதியில் வீட்டுக்கு முன்னால் உள்ள நீரோடையில் விழுந்து, இரண்டு வயது சிறுமி பலியான சோக சம்பவம், நேற்று (24) இடம்பெற்றுள்ளது.

சிராஜ் நகர், மயில் தீவு பகுதியைச் சேர்ந்த ஏ.அகிலா எனும் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுமியைக் காணவில்லை என, சுமார் அரை மணி நேரம் தாய் தேடிய நிலையில், வீட்டுக்கு முன்னால் உள்ள நீரோடையில் சிறுமி சடலமாக மீட்கப்பட்டதாக ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் இவ்வாறு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

## உயிரிழந்த நபருக்கு கொரோனா


க. அகரன்

வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்ட நிலையில் உயிரிழந்த நபருக்கு கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், நேற்று முன்தினம் (23) காலை, சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

எனினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாகவே அவர் உயிரிழந்திருந்தார்.

இதன்போது, அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையில், கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



## கொரோனா செய்தி துளிகள்

- நுவரெலியா மாவட்டத்தில், நேற்று முன்தினம் (23) 5 கொரோனா மரணங்கள் பதிவு. 167 பேருக்குத் தொற்று உறுதி. (எஸ்.கணேசன், எச்.எம்.ஹேவா).
- கந்தப்பளை பார்க், தேயிலை மலை ஆகிய தோட்டங்களில், நேற்று (24) மூவருக்கு தொற்று உறுதி. (ஆர்.ரமேஸ்).
- மாத்தளை, ரத்தொட்டைப் பிரிவில், ஒரு வாரத்துக்குள் மூன்று கொரோனா மரணங்கள் பதிவு. மாத்தளையில் இதுவரை 53 பேர் மரணம். (மஹேஷ் கீர்த்தி).
- மாத்தளையில் 125 பேருக்கும் கண்டியில் 105 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி.

நாட்டு மக்களின் உயிரை

# "இலட்சத்திலும் கோடியிலும் கணக்கிடுகின்றனர்"

நாட்டு மக்களின் உயிரை இலட்சத்திலும் கோடிகளிலும் கணக்குப்பார்க்கும் நிலையிலேயே, இன்றைய அரசாங்கம் உள்ளதென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் சாடியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறியுள்ள அவர், நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பு மிக மோசமாக உள்ளது. இந்நிலைமைக்கு சரியான நேரத்தில், சரியான தீர்மானங்களை அரசாங்கம் எடுக்கத் தவறியமையே காரணமாகும்.

விமான நிலையத்தைக் கட்டுப்பாடின்றித் திறந்தமை, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் வர அனுமதித்தமை, சித்திரைப் புத்தாண்டில் கட்டுப்பாடுகளைத் தளரவிட்டமை, தடுப்பூசி ஏற்றுவதில் தாமதம் போன்றவையே நாட்டில் தற்போதைய நிலைமைக்குக் காரணங்களாகும்.

நாட்டின் தற்போதைய நிலையில், மூன்றாவது அலையைத் தாண்டி, நான்காவது அலை ஏற்படும் என ஊகிக்கப்படுகின்றது. இந்நிலைமையைத் தடுக்க நாட்டிலுள்ள சுகாதாரதுறை சார்ந்த பிரதான நான்கு அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளன. நாட்டைக் குறைந்தபட்சம் 14 நாள்களுக்கு முடக்குமாறும் மக்கள் நடமாட்டத்தை முழுமையாகத் தடுக்குமாறும் கோரியுள்ளனர்.



இதுவே, சர்வதேச ரீதியான சில ஆய்வுகளின் ஆலோசனையாகவும் உள்ளது. ஆனால், ஜனாதிபதியோ கொவிட்-19 தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியோ இதற்குச் செவிசாய்ப்பதாக இல்லை.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், நாட்டை ஒரு நாளைக்கு முடக்கினால் 140 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார். அவ்வாறு பார்த்தால்கூட, 14 நாள்களுக்கு 1,960 கோடி ரூபாய் நட்டம் ஏற்படும். அண்மையில் நாட்டில் ஏற்பட்ட சீனி மோசடியில் மட்டும் அரசாங்கத்துக்கு 1,950 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டமை என்பது அனைவருக்கும் தெரியும்.

தற்போதைய அரசாங்கம், நாட்டு மக்களின் உயிர்களை அலட்சியமாகப் பார்க்கும் அரசாங்கமாக மாறியுள்ளது. இலட்சங்கள், கோடிகளை எப்போதும் உழைத்துக்கொள்ள முடியும். மக்கள் ஆரோக்கியமாக இருந்தால் நாட்டின் பொருளாதாரத்தை எப்போதும் மேம்படுத்திக்கொள்ள முடியும் என்றும் வேலுகுமார் எம்.பி மேலும் தெரிவித்தார்.

# புதையல் தோண்டிய அதிபர் கைது



■ சு.சுரேந்திரன், சுமணசிறி குணத்திலக்க

பிபிலை, மெதகம பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் வளாகத்துக்குள் புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட நால்வரை, மொனராகலை பொலிஸார் நேற்று முன்தினம் (23) கைதுசெய்துள்ளனர்.

ஜேசிபி இயந்திரத்தைக் கொண்டு புதையல் தோண்டும் செயற்பாட்டில் மேற்படி நால்வரும் ஈடுபட்டிருந்தனர்.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், குறித்த நால்வரையும் கைதுசெய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்திய பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.



## உலருணவுப் பொருட்கள் கையளிப்பு

■ நீலமேகம் பிரசாத்

கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு, முதற்கட்டமாக உலருணவுப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், கொட்டகலை பிரதேச சபைத் தவிசாளர் ராஜமணி பிரசாந்த், கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் ஊடாக இப்பொருள்கள் கையளிக்கப்பட்டன.

கிளங்கன் வைத்தியசாலைக்கு

## 'பி.சி.ஆர் இயந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கவும்'

■ நீலமேகம் பிரசாந்த்

டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கென பி.சி.ஆர் இயந்திரம் ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு, சுகாதார அமைச்சு முன்வர வேண்டும் என்று, நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் வீ. குணரட்னம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், பொகவந்தலாவை, நோர்வூட் பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று கோரத்தாண்டவம் ஆடுகின்றது. அன்றாடம் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். கிளங்கன் வைத்தியசாலையை நம்பி, பெரும்பாலான தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் வாழுகின்றனர். எனவே, இந்த வைத்தியசாலைக்கென பி.சி.ஆர் இயந்திரம் ஒன்று இல்லாதிருப்பது கொரோனா வைரஸ்



தொற்றாளர்கள் மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சகல வசதிகளுடன் இந்த வைத்தியசாலை திறக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றியே இந்த வைத்தியசாலை இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 'பெக்கோ' விழுந்ததில் பெற்றோர் தப்பினர்; குழந்தைக்குக் காயம்

■ அஜித்லால் சாந்த உதய, ஏ.ஏ.எம். பாயிஸ்

பலாங்கொடை, கல்கம, லந்துயாய பிரதேசத்தில், நேற்று முன்தினம் (23), பெக்கோ இயந்திரமொன்று வீடொன்றின் மீது விழுந்ததில் அவ்வீடு பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. அத்துடன் வீட்டுக்குள் பெற்றோருடன் இருந்த குழந்தையும் காயமடைந்துள்ளது. பெற்றோர் தெய்வாதீனமாக உயர்தப்பியுள்ளனர் என பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியைவிட்டு விலகிச் சென்று, சுமார் 20 அடி பள்ளத்திலுள்ள வீட்டின் மீதே பெக்கோ இயந்திரம், விழுந்து விபத்துக்குள்ளானது.





இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பருவ காலம் நிறைவுக்கு வருகிறது

■ ரஞ்சித் ராஜபக்ஷ, அஜித்லால் சாந்த உதய

2021-2021ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாத மலையின் பருவகாலம், வெசாக் தினமான 27ஆம் ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருவதாக, சிவனொளிபாத மலையின் மகாநாயக்க தேரர் பெங்கமுவ தம்மதின்ன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அன்றைய (27) தினம் மாலை, சிவனொளிபாத மலையில் பிரதிஷ்டடை செய்யப்பட்டுள்ள சமன் தெய்வ திருவுருவம், கும்பம், ஆபரணங்கள் என்பன,



இரத்தினபுரி வழியாகவும் ஹட்டன் வழியாகவும் மீண்டும் பெல்மடுல்ல ரஜ மகா விகாரைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளன.

பொதுச் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இராணுவத்தினரின் உதவியுடன் மேற்படி ஆபரணங்கள் கொண்டு செல்லப்படவுள்ளன.

மலையகத்தின் மைந்தன் மடிந்து ஓராண்டு கடந்ததைக் கூட

# 'ஏற்க முடியவில்லை'

"மலையக மக்களுக்காக தேசியம் கடந்து, ஓங்கி ஒலித்த குரல் மௌனித்து, நாளையுடன் (26) ஓராண்டு கடக்கிறது. இவ்வோராண்டு கடந்ததைக் கூட ஏற்க முடியாத நாம், அந்த மாமனிதரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிட வேண்டும் என்பதற்காக முழுமூச்சாய் நின்று போராடிக்கொண்டு இருக்கிறோம்" என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"அமரர் ஆறுமுகன் தொண்டமானின் இழப்பு, ஈடுசெய்ய முடியாதது. மலையகத்துக்காக எம் மலையக மக்களுக்காக, அவர் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காதவை. 'தம்பி சேர்' என்று பெருந்தோட்ட மக்களால் உரிமையுடன் அழைக்கப்படும் அமரர் ஆறுமுகன் தொண்டமான், மலையக மக்களின் காவல் தெய்வமாகவே செயற்பட்டார்.

"அவருடைய பெயரைக் கூறினாலேயே, தோட்டத் தொழிலாளர்களுக்கு தைரியம் வரும். அந்தளவுக்கு அவர், மலையக மக்களின் பாதுகாப்புக் கவசமாகவே செயற்பட்டார். அவரது அனுமதியின்றி மலையகத்திலிருந்து ஒரு கல்லைக்கூட அசைக்க முடியாது என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருந்த மாபெரும் மனிதர் அவர்.


"மலையக மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக, துணிச்சலுடன் செயற்பட்ட அவர், மலையக மக்களுக்கென கொள்கைகளை வகுத்துச் செயற்பட்ட உயரிய பண்புமிக்க கொள்கைவாதி. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு ஈடாக, மலையக மக்களுக்காகப் பணியாற்றிய ஆறுமுகன் தொண்டமான் போன்றதொரு பெருந்தலைவரை, கடந்த காலங்களில் மலையக மக்கள் கண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"மலையகம் கற்றுத்தேர்ந்த சமூகமாக மாற வேண்டும் என்றும் இந்நாட்டை வழிநடத்தும் பதவிகளில் மலையக மக்கள் அமரவேண்டும் என்பதையும் தனது எதிர்காலத் திட்டமாக வைத்துச் செயற்பட்டார்.

'மலையக மைந்தனின் இறுதி ஆசையான ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு, அவரது ஓராண்டு நினைவு தினத்துக்குள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது மன ஆறுதலைத் தந்துள்ளது. இருந்தாலும், அவரது அனைத்து எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்ற வேண்டுமென்பதே, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கிய கடமையாகவுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே, எம் அனைவரினதும் இலட்சியப் பணியாகவுள்ளது" என்று, செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

## 'ஆளுமைமிக்க தலைவர் சிங்.பொன்னையா'

மூத்த தொழிற்சங்கவாதியான அமரர் சிங்.பொன்னையா, பெயரில் கம்பீரமும் பேச்சில் கர்ஜனையும் கொண்டவர் என்றும் அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் மு.இராமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.



அமரர் சிங்.பொன்னையாவின் இரண்டாவது வருட நினைவுதினத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ள அவர்,

அமரர் சிங்.பொன்னையா தொழிற்சங்கம், தோட்ட நிர்வாக பேச்சுவார்த்தைகளில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி, அதில் நிபுணத்துவம் பெற்றவராகத் திகழ்ந்தார். சிங்காரவேல் பொன்னையா எனும் இவர், தந்தையின் பெயரில் 'சிங்' என்ற அடை மொழியோடு சிங்.பொன்னையா எனத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார்.

சிறந்த ஆங்கிலமொழிப் புலமை கொண்ட இவர், நான்கு முறை மத்திய மாகாண சபைக்குத் தெரிவாகி, மலையக மக்களுக்காகப் பணியாற்றியுள்ளார். அவர் மறைந்து இரண்டு வருடங்கள் கடந்திருந்தாலும் மலையகத்தின் ஆளுமைமிக்க தொழிற்சங்கவாதியாக, மலையக மக்களின் மனதில் இன்றளவும் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்று, அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில்

## சர்வதேச ஆராய்ச்சி சம்மேளனம்




■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில், இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் சர்வதேச ஆராய்ச்சி சம்மேளனத்தை, எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சப்ரகமுவ பல்கலைக்கழகத் துணைவேந்தர் உதய ரத்னாயக்க தெரிவித்தார்.

அத்துடன் பல்கலைக்கழகத்தின் காலாண்டு விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் பல்கலைக்கழக நிர்வாகம் திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கருத்திற்கொண்டு சர்வதேச ஆராய்ச்சி சம்மேளனத்தை பல்கலைக்கழகத்தில் அல்லது ZOOM, ஹைப்ரிட் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி நடத்துவதா என்பது, நாட்டின் நிலைமையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ள போதிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள், இணையவழி மூலமாக நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட மக்களுக்கு

# எச்சரிக்கை

### இயல்புநிலை பாதிப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்டத்தில், கடும் காற்றுடன் கூடிய மழை வானிலை நீடித்துவருவதால், பொதுமக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் அறிவுறுத்தியுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள அறிவுறுத்தலுக்கு அமைவாக நுவரெலியா மாவட்டத்தில், எதிர்வரும் 28ஆம் திகதிவரை கடும் காற்றுடன் கூடிய மழை வானிலை நீடிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே அனர்த்த வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை பிரதான வீதிகளில் கற்பாறைகள், மண்திட்டு என்பன சரிந்து விழும் அபாயம் நிலவுவதுடன்



பனிமூட்டமும் அதிகரித்துக் காணப்படுவதால், வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறும் மேற்படி அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் நேற்று (24) நீடித்த கடும் காற்றுடன் கூடிய மழை வானிலை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பிரதான வீதிகளில் பனிமூட்டம் அதிகரித்துக் காணப்படுவதுடன் நீர்நிலைகளும் பெருக்கெடுத்துள்ளன.

அதிக மழை காரணமாக விவசாயச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளன என்று, விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# ‘கறுப்பு பூஞ்சை’ பேரரக்கனின் ஆட்டத்திலிருந்து கண்களைக் காப்போம்

ஊர்களில் சொல்லப்பட்ட பழமொழிகளில் பல, யதார்த்தத்துக்குப் பொருந்துவதாய் அமைந்துவிடுகின்றன. அதில், ‘மரமேறி விழுந்தவனை, மாடேறி மிதித்த கதை’ என்பர். அதைப்போலதான், மூன்றாவது அலைக்குள் நுழைந்திருக்கும் கொரோனா, ‘பூஞ்சையாய்’ உருவெடுத்துள்ளது.

கொரோனாவின் கோரத்தாண்டவம் கட்டுக்கடங்காது கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கையில், ‘கறுப்பு பூஞ்சை’ உயிர்களைக் குடித்துக்கொண்டிருக்கிறது. இந்தத் தொற்றுக்கு உள்ளாகுபவர்களில் 50 சதவீதமானவர்கள் இறந்துவிடுவரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸின் அலைகளுக்குள் சிக்கித்தவிக்கும் நிலையில், பூஞ்சைகளும் ஏறிமிதித்துத் துவம்சம்செய்கிறது. இந்தியாவிலேயே பூஞ்சையின் தாக்கம் அதிகரித்துள்ளது. கறுப்பு பூஞ்சையால் பாதிக்கப்பட்ட நோயாளி, மரணமடைந்த முதலாவது சம்பவம் ஹரியானாவில் பதிவாகி உள்ளது.

இந்தியாவின் நேற்றைய நிலைவரத்தின் பிரகாரம், சுமார் 8,800 பேருக்கு கறுப்பு பூஞ்சை தொற்றியிருப்பது உறுதியானது. இவர்கள் அனைவரும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களாவர். கறுப்பு பூஞ்சையை மருத்துவ ரீதியில், ‘மியூகோமிகோசிஸ்’ என்றழைப்பர். இதுவோர் அரிதான தொற்று நோயாகும்.

மண்ணிலும் காற்றிலும் மற்றும் ஆரோக்கியமான மக்களின் மூக்கு, சளியிலும் காணப்படும் ஒருவகையான பூஞ்சை, நேரடியாக மூளை, நுரையீரலைத் தாக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி குறைவதால், அவர்களை கறுப்பு பூஞ்சை, இலகுவில் தாக்குவதாக அறியக்கிடைத்துள்ளது. அதுமட்டுமன்றி, கண்களில் இருந்து மூளைக்குச் செல்வதால், இரண்டு கண்களிலும் பார்வை இழப்பை ஏற்படுத்துகிறது. ஆகையால், இப்பேரரக்கனின் ஆட்டத்திலிருந்து கண்களைக் காத்துக்கொள்ளவேண்டும்.

கொரோனா தொற்றிலிருந்து மீண்ட 12 முதல் 15 நாள்களுக்கு இடைப்பட்ட நாள்களிலேயே, ‘கறுப்பு பூஞ்சை’ கண்களின் ஊடாக நுழைந்து, மூளையை நேரடியாகத் தாக்குகிறது.

ஆகையால், கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தற்காத்துக்கொள்வதற்காக, முகக் கவசம் அணிவதைப்போல, கண்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கான வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

இலங்கையில், அம்பாறை மாவட்டத்தில் ‘கறுப்பு பூஞ்சை’ நோயாளர் இனங்காணப்பட்டுள்ளார் என்ற தகவலை இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளை மறுதலித்துள்ளமை மனதுக்கு நிம்மதியைத் தருகிறது.

ஆனால், இந்தியாவை வதைத்துக் கொண்டிருக்கும் கொரோனாவின் வகைகளுக்கு ஒத்திசைவான வகைகள், இலங்கையிலும் கண்டறியப்பட்டுள்ளன என்பதால், கறுப்பு பூஞ்சையும் காற்றோடு, கலந்து ஊடுருவுவது வெகுதொலைவில் இல்லை.

கண்களைச் சுற்றி கருவளையம் தோன்றிவிட்டால், கறுப்பு பூஞ்சை ஏற்பட்டுவிட்டதென அச்சம் கொள்ளத் தேவையில்லை. தூங்காமலிருக்கும் போது, கண்களைச் சுற்றி உருவாகும் கறுப்பு நிறத்துக்கும், கறுப்பு பூஞ்சைக்கும் நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆகையால், கண்களில் மாற்றங்கள் தென்படும் போதே, வைத்தியரை நாடுவது உசிதமானது.

அரக்கன், பேரரக்கனாகி, கண்களைக் குறிவைத்து வருகின்றான் என்பதால், முதலில் கொரோனா வைரஸிடமிருந்து, ஒவ்வொருவரும் தற்காத்துக் கொள்வதே மேலானதாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

காதலர்கள், தங்களுக்கு இடையில் காரணகாரியங்கள் இல்லாமல், உரையாடினாலும் ஒருவர் பேசுவதை மற்றையவர் இரசித்துக் கேட்பார். ஒன்றுமே இல்லாத விடயத்துக்கும் சிரிப்பார்கள்; காதல் பலசமயங்களில் தன்னிலை மறப்பது சாதாரணம்.

ஆனால், திருமணமான பின்னர், இவர்கள் சின்னச்சின்ன விடயங்களுக்கும் கோபித்துக் கொள்வார்கள். சில சமயங்களில் ஒருவர் பேச்சைக் கேட்காமலும் விட்டுக்கொடுக்காமலும், யார் பெரியவர் என்பதை நிரூபிக்க வாதாடுவதும், பின்னர் களைத்து ஒதுங்குவதும் நகைப்புக்கு உரியது.

காதல் வாழ்வில் தர்க்கம் ஆகாது. ஒவ்வொருவரும் தாம் வகுத்துக்கொண்ட, எண்ணங்களின் வட்டத்துக்குள் வாழ்வார்கள். இது இயற்கையானது. எல்லோரும் ஒத்தகருத்துடன் இருக்க மாட்டார்கள். ஆனால், ஒருவர் மற்றவர் நினைப்புடனும் ஒத்த எண்ணத்துடனும் வாழ்வதும் சாத்தியமானது.

கருத்துகளைத் திணிக்காமல், வார்த்தைகளை இரசிக்க வேண்டும். இளமையில் தொடரும் பிணைப்பு, மிகஇறுக்கமான அன்பால் கைகூடி வருவதே இல்லறமாகும். சில மனஸ்தாபங்கள் கூட, புரிதலை உண்டாக்கலாம். குடும்ப ஐக்கியம், சௌக்கியம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## மக்களைத் தெளிவுபடுத்தாமல்

# நிறைவேற்றப்பட்ட ‘சீனக்கனவு’

மொஹமட் பாதுஷா

சீனாவில் உருவான அல்லது உருவாக்கப்பட்ட கொரோனா வைரஸின் புதிய உருமாறிகள், இலங்கையில் மிக வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றன. இந்த இக்கட்டான சூழ்நிலையில், சீனாவின் கனவுத் திட்டமான, கொழும்புத் துறைமுக நகர் சட்டமூலம், மிகவும் சூட்சுமமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெரும் வாதப்பிரதிவாதங்களுக்கு உள்ளாகியிருந்த இச்சட்டமூலத்துக்கு ஆதரவாக, 149 எம்.பிக்கள் வாக்களித்துள்ளனர். 58 பேர் வாக்குகளை எதிராகப் பதிவு செய்துள்ளனர். மற்றைய எம்.பிக்களில் அநேகர், வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இருவருக்கு விடுமுறை வழங்கப்பட்டு உள்ளது.

இலங்கை அரசியல் சூழலில், ஒரு வழக்கம் இருக்கின்றது. அதாவது, ஒரு சட்டமூலம் அல்லது செயற்றிட்ட முன்மொழிவு முன்வைக்கப்படுகின்ற போது, ஆளும் தரப்பில் இருப்பவர்களும், ஆளும் கட்சிக்கு வெளியில் இருந்து ஆதரவு தெரிவிப்பவர்களும் அதற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். அதுபோல, எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு, ஆளும் தரப்புடன் முரண்பட்டு நிற்கின்ற எம்.பிக்கள், அதற்கு எதிராக வாக்களிப்பார்கள்.

அதைவிடுத்து, ஆட்சியாளர்களோ ஆதரவு அல்லது எதிர்ப்புத் தெரிவிக்கின்ற எம்.பிக்களோ, சட்டமூலத்தின் ஆழ அகலங்களைப் படித்து, அது நாட்டின் இறைமைக்கும் மக்களுக்கும் எவ்விதமான சாதக பாதகங்களைக் கொண்டு வரும் என்பதை ஆய்ந்தறிந்து, தீர்க்கதரிசனத்துடன் முடிவெடுக்கும் பண்பாடோ திறனோ, இலங்கையின் அரசியல் செல்நெறியில் இல்லை எனலாம்; அல்லது, மிகக் குறைவு.

ஒருவேளை, சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் ஆட்சியில் இருந்தாலும் கூட, இதுதான் நடந்திருக்கும். சீன முதலீட்டிலான கொழும்புத் துறைமுக நகர், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் என்று, அவர்கள் கூறியிருப்பார்கள்.

இந்தச் சட்டமூலம் நிறைவேறினால், சீனாவுக்கு தனிநாடு கொடுக்கப்பட்டது போலாகிவிடும்; இலங்கையை கட்டம் கட்டமாக, சீனா கைப்பற்றி விடும் என்று, ராஜபக்ஷர்கள் பெரும் பிரளயத்தை உண்டுபண்ணி இருப்பார்கள். நாட்டுப்பற்றாளர்களை இணைத்துக் கொண்டு, ஆட்சியையே புரட்டிப் போட்டிருப்பார்கள். அது, இன்று மறுதலையாக நடந்துள்ளது. அவ்வளவுதான்!

ஆனால், எதிரணி பலமற்று இருப்பதாலும் தேசப்பற்றாளர்கள், இனவாதிகளைப் பயன்படுத்தும் கலை இவர்களுக்குத் தெரியாமல் இருப்பதாலும், கொரோனா வைரஸின் பக்கம், மக்களின் கவனத்தைத் திசைதிருப்பிவிட்டு, இச்சட்டமூலத்தை மிகச் சூட்சுமமாக நிறைவேற்றி இருக்கின்றார்கள்.

போருக்குப் பின்னரான அபிவிருத்தியில், ராஜபக்ஷ ஆட்சிக்கு பெரும் பங்கிருக்கின்றது. அந்தவகையில், சீனத் துறைமுக நகரும் பெரும் பொருளாதார அனுகூலங்களைக் கொண்டு வரலாம். இலங்கையருக்கு ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்பு, முதலீடுகள், அந்நியச் செலாவணி வருமானம் எனப் பலதரப்பட்ட அனுகூலங்களை, நமது பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் என, அரசாங்கம் கூறுவதை மறுப்பதற்கில்லை.

ஆனால், தலைநகருக்கு அருகிலான கடற்பரப்பில், ஒரு நகரை உருவாக்கி, அதன் முழு அதிகாரங்களையும் கையளிப்பதானது, கிட்டத்தட்ட தனிஆளுகைக்கான ஓர் ஆட்புலத்தை, சீனாவுக்கு 99 வருடங்களுக்கு எழுதிக் கொடுப்பதைப் போன்றது என்றே, மறுதரப்பில் கூறப்படுகின்றது.

இது, இலங்கையின் ஆட்புல எல்லை, இறையாண்மை ஆகியவற்றுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைவதுடன், இலங்கை இன்னும் சில தசாப்தங்களில், சீனாவின் நவீன, நிழல் கொலனித்துவத்துக்குள் படிப்படியாக வந்துவிடலாம் என்றே, இந்தத் துறை சார்ந்த நிபுணர்கள் எச்சரிக்கை விடுக்கின்றனர்.

எனவே, இந்த விடயம் குறித்து, நாட்டு மக்களுக்கு நேர்மையான முறையில் தெளிவுபடுத்துகின்ற தார்மிகக் கடமை, அரசாங்கத்துக்கு இருக்கின்றது. அதேபோல், இவற்றை எல்லாம் பரிசீலித்துப் பார்த்தே, பாராளுமன்ற உறுப்பினர்கள், தமது முடிவை எடுக்க வேண்டும்.

ஆட்சியாளர்கள், தமது அரசியல் நலனுக்காக, நாட்டுக்குப் பாதகமான நகர்வுகளைச் செய்யலாம். இருந்தபோதிலும், சிங்கள மக்களுக்குப் பாதகமான நிலைப்பாடுகளை, பொதுவாகவே எடுக்கமாட்டார்கள் எனக் கருதலாம். ஆயினும், சிறுபான்மை மக்கள் விடயத்தில், அப்படி நம்பிக் கொண்டிருக்க முடியாது.

எனவே, தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் இவற்றை முதலில் விளங்கிக் கொண்டு, மக்களைத் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். ஆனால், இதை ஒரு பெரிய விடயமாக, அவர்கள் கருதியதே இல்லை. குறிப்பாக, முஸ்லிம் எம்.கிக்களும் ஒருசில தமிழ் எம்.பிக்களும், இவ்விதமே தமது ஆதரவு, எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்து வருகின்றனர்.

முஸ்லிம் எம்.பிக்கள், பொதுவாகவே சட்டமூலங்களின் ஆழ அகலங்களை அறிந்து கொண்டு, ஆதரவளித்த சந்தர்ப்பங்களோ எதிராக வாக்களித்த வரலாறுகளோ, மிக அரிதாகும். அரசாங்கத்தை எதிர்ப்பதாக இல்லை என்பது உள்ளிட்ட ‘வேறு’ காரணங்களே, அவர்களது தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. சில தமிழ் எம்.பிக்களும் இவ்வகைக்குள் அடங்குகின்றனர்.

பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படும் ஒரு சட்டமூலம், பிரேரணை குறித்து, ஒரு சில முஸ்லிம் தலைவர்களும் அரசியல்வாதிகளும் மட்டுமே வாசித்து, விளங்கிக் கொள்கின்றனர். ஆனால், தமக்கு வாக்களித்த மக்களுக்குத் தெளிவுபடுத்தும் முஸ்லிம் எம்.பிக்கள் என்று பார்த்தால், ஒருவரைக்கூட கண்டுபிடிக்க முடியாது.

தேர்தல் வரும்போது, எப்படி மக்களைச் சமாளிக்கலாம் என்பதை மட்டும், நன்கு கற்றுக் கொண்டுள்ளனர். மறுபுறத்தில், மக்களும் தமது பிரதிநிதிகள் மிகவும் புத்திசாலிகள்; எனவே, எந்தத் தீர்மானத்தை அவர்கள் எடுத்தாலும், சரியாகத்தான் இருக்கும் என்று நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

கொழும்புக்கு மேற்காக உள்ள கடற்பரப்பை நிரப்பி, துறைமுக நகரொன்றை அமைப்பதற்கான செயற்றிட்டத்துக்கு, 2014ஆம் ஆண்டு, சீனாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், இதற்கான அனுமதியை வழங்கியிருந்தது. 2015இல் ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசாங்கம் கூட, இச் செயற்றிட்டத்தைத் தடுத்து நிறுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இந்த நிலையிலேயே, மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், இப்போது அதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றி உள்ளது. துறைமுக நகர் தொடர்பான விசேட சட்ட ஏற்பாடுகள், விதிமுறைகளை உள்ளடக்கிய இச் சட்டமூலம், பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னதாகவே, பெரும் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியிருந்தது.

துறைமுக நகருக்கான தனியானதொரு சட்டமூலத்தை இயற்றி, அதிகாரத்தை வழங்குவது என்பது, விடுதலைப் புலிகள் கோரிய தனிநாட்டை வழங்குவதைப் போன்றது என்ற கருத்துகள், இன்று வரையும் முன்வைக்கப்படுகின்றன. பிரபாகரன் கோராத அதிகாரங்கள், சீனாவுக்கு வழங்கப்பட்டு உள்ளதாக விமர்சனங்கள் எழுந்தன.

ஆளும்தரப்பில் உள்ளவரும், தேசியவாதிகளுக்கு மிக நெருக்கமானவருமான விஜேயதாச ராஜபக்ஷ, இதை ‘தனிநாடு’ என்று சொன்னார். இது பெரும் சலசலப்பையும் ஆட்சியாளர்களுக்கு ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

இந்நிலையிலேயே, ராஜபக்ஷர்களின் ஆட்சி அமைவதில், முக்கிய பங்காற்றிய முறுத்தொட்டுவே ஆனந்த தேரர், துறைமுக நகருக்கு எதிராகக் குரல் கொடுத்தார். “எமது பேச்சைக் கேட்காவிட்டால், ஆட்சியைக் கவிழ்ப்போம்” என்று தேசியவாத சக்திகள் உரத்த தொனியில் அரசாங்கத்தை எச்சரித்தன.

சட்டமூலம் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து, அதற்கெதிராக உயர்நீதிமன்றில் 19 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இது தொடர்பான விசாரணைகளின் பின்னர், உயர்நீதிமன்றத் தீர்ப்பு, சபாநாயகருக்கு அனுப்பப்பட்டது.

இதன்படி, துறைமுக நகர் சட்டமூலத்தில் உள்ள சில சரத்துகளை, அப்படியே நிறைவேற்றுவது என்றால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது. எனவே, அத்திருத்தங்களை மேற்கொள்வதாக அரசாங்கம் உறுதியளித்தது. அதற்கமைய திருத்த முன்மொழிவுகளுடன் இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போல, ஆளும் அரசாங்கத்துடனான உறவைப் பொறுத்தே, இச் சட்டமூலத்துக்கான ஆதரவு அல்லது எதிர்ப்பு நிலைப்பாட்டை, முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும், ஒருசில தமிழ் எம்.பிக்களும் எடுத்துள்ளனர்.

இவர்களில் அநேகமான எம்.பிக்கள், சட்டமூலம் பற்றிய உயர்நீதிமன்ற வியாக்கியானம் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே, தமது நிலைப்பாடு குறித்த முடிவுக்கு வந்துவிட்டனர்.

வழக்கத்துக்கு மாறாகச் சிலர் வாக்களித்துள்ளனர். குறிப்பாக, ராஜபக்ஷ எதிர்ப்பு கோஷங்களை முன்னிறுத்தி எம்.பியாகிய, மக்கள் காங்கிரஸின் அலிசப்ரி ரஹீம், இஷாக் ரஹ்மான் இருவரும் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

தடுப்புக்காவலில் இருந்தாலும், ரிஷாட் பதியுதீன் எதிர்த்து வாக்களித்துள்ளார். எதிரணியிலுள்ள முஸ்லிம் கட்சிகளின் ஏனைய எம்.பிக்களும் ஆதரவளிக்கவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் எதிர்த்துள்ளது.

இதையெல்லாம் தாண்டி, 58 மேலதிக வாக்குகளால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தேசியவாதிகளையும் தேசப்பற்றாளர்களையும் உள்ளடக்கியதே இந்த அரசாங்கம் என்று கூறிக்கொள்கின்ற இவ்வரசாங்கம், இச் சட்டமூலத்தைக் கொண்டு வந்தமை ஆச்சரியமானது. கடைசிக் கட்டத்தில், தேசப்பற்று சக்திகள் அடங்கிப் போனமை அதைவிட ஆச்சரியமானது.

அரசாங்கமும் சீனாவும் இதை ஒரு வெற்றியாகக் கொண்டாடுகின்றன. இதை வாபஸ் பெறுமாறு எதிரணி கோருகின்றது. சாதாரண மக்களுக்கு, இதில் என்ன உள்ளது, என்ன நடக்கப் போகின்றது என்று, ஒன்றும் புரியவில்லை.

துறைமுக நகர் திட்டத்தில் சாதகமும் உண்டு; பாதகமும் உண்டு. இவற்றுள் எதை, எது மேவும் என்பதை, மக்கள் முழுமையாக பட்டறிந்துகொள்ள இன்னும் 20 வருடங்கள் செல்லலாம்.

## கடிதங்கள்

### “இணையவழி கல்வியைத் தொடர முடியவில்லை”

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, நாட்டில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், கல்வியமைச்சு இணையவழிக் கல்வியைத் தொடருமாறு அறிவித்துள்ளது.

இந்நிலையில், சரியான இணைய வசதிகள் இல்லாமையால், துணுக்காய் வலயத்தில் சுமார் 10,000 வரையான மாணவர்கள், இணையவழிக் கல்வியைத் தொடரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பில் மாணவர்கள், பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். வலய அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என்ன செய்வதென்று தெரியாத நிலையிலுள்ளனர்.

பல்வேறு தொலைத்தொடர்பு நிறுவனங்கள் சேவையில் உள்ளபோதும், சரியான இணைய வசதியை இங்கு பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர்.

துணுக்காய் வலயத்தில் குறிப்பாக வன்னிவிளாங்குளம், கல்விளான், கோட்டைகட்டி, அம்பலப்பெருமாள், ஐயன்குளம், உயிலங்குளம், தென்னியன்குளம், ஒட்டங்குளம், மூன்று முறிப்பு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள், பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

எனவே, துணுக்காய் கிராமத்தில் தொலைத்தொடர்பு சேவையை விரிவுபடுத்துமாறு, பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

துணுக்காய் வலயத்தில் 64 பாடசாலைகள் காணப்படுவதுடன், ஆண்டு ஒன்று தொடக்கம் உயர்தரம் வரையிலான சுமார் 10,000 வரையான மாணவர்கள் கல்வி கற்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

-செ. கீதாஞ்சன்



# ரஜினியுடன் மோதும் அஜித்?

நேர்கொண்ட பார்வை திரைப்படத்துக்கு பிறகு அஜித்குமார் 'வலிமை' திரைப்படத்தில் நடித்து வருகிறார். இந்தத் திரைப்படத்தை ஹெச்.வினோத் இயக்குகிறார்.

போனி கபூர் தயாரிக்கும் இந்தத் திரைப்படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பு முடிந்துள்ளது. அடுத்த கட்டமாக வெளிநாடுகளில் படமாக்க வேண்டிய சண்டை காட்சிகள் மட்டுமே பாக்கி உள்ளன.

இந்தக் காட்சிகளை எடுத்து விட்டு தொழில்நுட்ப பணிகளை தொடங்க இருந்த நிலையில், கொரோனா ஊரடங்கு திரைப்படத்தை முடக்கி உள்ளதால் திட்டமிட்டபடி படத்தை ரிலீஸ் செய்வதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

'வலிமை' திரைப்படத்தை ஓகஸ்ட் மாதம் திரைக்கு கொண்டுவர முடிவு செய்திருந்த போதும், தற்போதைய நிலையில் அதற்கு வாய்ப்பு இல்லை என கூறப்படுகிறது.

ஆதலால் 'வலிமை' திரைப்படத்தை தீபாவளிக்கு திரைக்கு கொண்டுவர திட்டமிட்டு வருகிறார்களாம்.

ரஜினியின் 'அண்ணாத்த' திரைப்படம் தீபாவளிக்கு ரிலீசாகும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது 'வலிமை' படமும் அந்த ரேஸில் இணைய உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜோதிகாவின் விளக்கம்

கே.ஜி.எப் திரைப்படத்தை இயக்கியதன் மூலம் பிரபலமானவர் பிரசாந்த் நீல். இவர் அடுத்ததாக பாகுபலி நடிகர் பிரபாஸை வைத்து 'சலார்'என்ற திரைப்படத்தை இயக்க உள்ளார்.

பிரபாசுக்கு ஜோடியாக ஸ் ருதி ஹாசன் நடிக்கிறார். பிரபல கன்னட நடிகர் மது குருசாமி வில்லனாக நடிக்கிறார். கொரோனா ஊரடங்கு காரணமாக படப்பிடிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நடிகை ஜோதிகா, சலார் திரைப்படத்தில் பிரபாசுக்கு சகோதரியாக நடிக்க உள்ளதாக கடந்த சில தினங்களுக்கும் முன்னர் செய்தி வெளியானது.

இந்த நிலையில், நடிகை ஜோதிகா இதனை திட்டவட்டமாக மறுத்துள்ளார். மேலும், நடிகை ரம்யா கிருஷ்ணன் அந்தக் கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக புதிய தகவல் வெளியாகி உள்ளது.



# ஆலியாவுக்கு அதிஷ்டம்



ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்த 'இந்தியன் 2' திரைப்படத்தை கிடப்பில் போட்டுள்ள இயக்குநர் ஷங்கர், அடுத்ததாக தெலுங்கு நடிகர் ராம்சரணை வைத்து புதிய திரைப்படம் ஒன்றை இயக்க உள்ளார்.

பிரபல தெலுங்கு தயாரிப்பாளர் தில் ராஜூ பிரம்மாண்டமாக தயாரிக்கிறார். கொரோனா ஊரடங்கு முடிவுக்கு வந்தபின் இத்திரைப்படத்தின் படப்பிடிப்பை தொடங்க இயக்குநர் ஷங்கர் திட்டமிட்டுள்ளார்.

இந்த நிலையில், ராம்சரணுக்கு ஜோடியாக பிரபல பொலிவுட் நடிகை ஆலியா பட் நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. நடிகர் ராம்சரணும், நடிகை ஆலியா பட்டும் தற்போது ராஜமவுலி இயக்கத்தில் பிரம்மாண்டமாக உருவாகும் 'ஆர்.ஆர்.ஆர்.' திரைப்படத்தில் நடித்து வருகின்றனர். மேலும், ஆர்.ஆர்.ஆர். திரைப்படத்தில் ஆலியா பட்டின் நடிப்புத் திறமையை பார்த்து வியந்துபோன ராம்சரண், அவரை ஷங்கர் திரைப்படத்துக்கு பரிந்துரை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சென்னை

# "கசப்பு மருந்து தான்; அருந்தியே ஆகனும்"

கொரோனாவை இல்லாமல் செய்ய அனைவரும் முழு ஊரடங்கை மதித்து வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என முதலமைச்சர் ஸ்டாலின் கெஞ்சிக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று (24) அவர் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது:

"தமிழகத்தில் கொரோனா கட்டுக்குள் வரவில்லை. இதனை வீழ்த்த நாம் அனைவரும் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தளர்வுகளுடன் ஊரடங்கு போட்ட போது, பலர் வெளியே சுற்றித் திரிந்தனர். யாரும் மதிக்காத காரணத்தால் தளர்வுகள் இல்லா ஊரடங்கு அமல்படுத்தப்பட வேண்டியுள்ளது. கொரோனாவை யாருக்கும் கொடுக்க மாட்டேன்; யாரிடமும் பெறவும் மாட்டேன் என உறுதி ஏற்க வேண்டும்.

ஊரடங்கு நமது நன்மைக்காகத்தான் என உணர்ந்து அனைவரும் வீட்டில் இருங்கள். இது கசப்பு மருந்து தான்; ஆனாலும் அருந்தியே ஆக வேண்டும். ஊரடங்கு உத்தரவுக்கு கட்டுப்பட்டு வீட்டுக்குள்ளேயே இருங்கள் என கெஞ்சிக் கேட்கிறேன்" இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.





## திருச்சியில் கார் அம்பியுலன்ஸ்

"திருச்சி மாவட்டத்திலும் கார் அம்பியுலன்ஸ் சேவை விரைவில் தொடங்கப்படும்" என, மாநில நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தோட்டக்கலை - வேளாண் வணிகம் - வேளாண்மை ஆகிய துறைகள் சார்பில், வாகனங்கள் மூலம் காய்கறி விற்பனைத் தொடக்க விழா நேற்று (24) நடைபெற்றது.

சென்னையில் 108 அம்பியுலன்ஸ் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில், மாநகராட்சி மூலம் 250 கார்களை அம்பியுலன்ஸாக பயன்படுத்தும் சேவை தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல், திருச்சி மாவட்டத்திலும் கார் அம்பியுலன்ஸ் விரைவில் தொடங்கப்படும்" என்றார்.

## விமானத்தில் திருமணம்; விசாரணைக்கு உத்தரவு



மதுரையில் விமானத்தில் திருமணம் நடந்த விவகாரத்தில் விசாரணை நடத்த மத்திய விமான போக்குவரத்து துறை இயக்குநரகம் உத்தரவிட்டது. மேலும், திருமணம் நடந்த விமானத்தின் ஊழியர்கள் அனைவரும் தற்காலிக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை கோரிப்பாளையத்தைச் சேர்ந்த மரக்கடை அதிபர் மகன் ராகேஷ்ஷுக்கும், தொழிலதிபர் மகள் தீக்சனாவுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

இவர்களது திருமணத்தை வித்தியாசமான முறையில் நடத்த திட்டமிட்ட பெற்றோர்கள், மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கு தனியார் விமானம் ஒன்றை வாடகைக்கு முன் பதிவு செய்தனர்.

அதன்படி நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் மணமக்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் 161 பேருடன் அந்த விமானம் மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கு புறப்பட்டது.

விமானத்தில் சென்ற அனைவருக்கும் கொரோனாத் தொற்றுப் பரிசோதனை செய்யப்பட்டு தொற்று இல்லை என்பதை உறுதி செய்து கொண்டனர்.

அந்த விமானம் நடுவானில் சென்றபோது உறவினர்கள் மத்தியில் மணமகன், மணமகளுக்கு தாலி கட்டினார். பின்னர் அந்த விமானம் தூத்துக்குடிக்கு சென்றுவிட்டு மீண்டும் காலை 9 மணிக்கு மதுரை விமான நிலையம் வந்தடைந்தது.

உத்தரப் பிரதேசம்

## விஷ ஊசியென நதியில் குதித்து தப்பிக்க முயற்சி

கொரோனா வைரஸ் தடுப்பூசி போட, சுகாதார அதிகாரிகள் தங்கள் கிராமத்துக்கு வருகை தந்ததைக் கண்ட உத்தரப் பாராபங்கி மாவட்டத்தில் உள்ள சிசார்ஹா எனும் கிராமத்தில் உள்ள மக்கள், பயத்தின் காரணமாக அருகிலிருந்த சரயு நதியில் குதித்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தடுப்பூசி அல்ல, 'விஷ ஊசி' என்று சிலர் சொன்னதால் தாங்கள் நதியில் குதித்து தப்பிக்க முயன்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து தாம் எடுத்துக் கூறிய பின்பு, அந்த ஊரில் இருந்த 18 பேர் தடுப்பூசி போட்டுக் கொண்டதாக, ராம் நகர் துணை ஆட்சியர் ராஜீவ் குமார் சுக்லா தெரிவித்துள்ளார்.

இதேவேளை,பிகார் மாநிலத்தின் பக்ஸர் மாவட்டத்தின் சௌஸா பகுதியில்உள்ள சௌஸா மயானத்தில் கங்கையின் கரையில் சடலங்கள் மிதந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

உத்தரப்பிரதேசத்தின் கான்பூர், உன்னாவ் மற்றும் ஃபதேபூரில் நூற்றுக்கணக்கான உடல்கள் கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. ஈமக்கிரியைகளுக்கு அதிக செலவு ஏற்படுமென்ற காரணத்தால் மக்கள் இறந்தவர்களை ஆற்றங்கரை மணலில் அடக்கம் செய்வதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

காஸியாபாத்

## மஞ்சள் பூஞ்சையும் வந்தது

இந்தியாவில் பலரும் கொரோனா தொற்றில் இருந்து மீளாத நிலையில், சிலருக்கு கறுப்பு பூஞ்சை, வெள்ளை பூஞ்சை தொற்று ஏற்பட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை, மஞ்சள் பூஞ்சை தொற்று நோய், உத்தர பிரதேசத்தின் காஸியாபாத்தில் ஒரு நபருக்கு கண்டறியப்பட்டுள்ளது.

மஞ்சள் பூஞ்சை தொற்று முக்கியமாக மோசமான சுகாதாரத்தால் ஏற்படுகிறது. பூஞ்சைகளால் ஏற்படுகிற அரிதான நோய் தான் கறுப்பு பூஞ்சை தொற்று. இது, பொதுவாக மண், தாவரங்கள், அழுகும் பழங்கள், காய்கறிகளில் காணப்படுகிற ஒருவகை பூஞ்சையால் உருவாகிறது. மூளை, நுரையீரலைத் தாக்குகிறது. மேலும், முகம், கண் கீழ்ப்பகுதியில் வலி, வீக்கம், மூக்கடைப்பு, கண் மங்குதல் போன்ற அறிகுறி காணப்படும். இது குணப்படுத்திவிடக்கூடிய நோயென மருத்துவர்கள் கூறுகின்றனர்.

# ப்ரியாவின் பதில்



விஷாலின் அடுத்த திரைப்படத்தில் நாயகி நீங்களா? என ப்ரியா பவானி சங்கரிடம் ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அவர் தனது டுவிட்டரில் பதில் அளித்துள்ளார்.

"இப்போதைக்கு நானும் விஷாலும் இயக்குநர் கார்த்திக்கும் எங்களுடைய அன்புக்குரியவர்களைப் பாதுகாக்கும் முயற்சியில் உள்ளோம். உங்களது அன்புக்குரியவர்களையும் பாதுகாப்போம்.

நிலைமை அனைத்தும் சரியானதும் இது குறித்த முறையான அறிவிப்பு வெளியாகும்" என்று பதில் கூறியுள்ளார்.

# மீண்டும் டூயட்



பிரபாஸ் ஹீரோவாக நடித்துள்ள 'ராதே ஷ்யாம்' திரைப்படத்தில், அவருக்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார். ராதா கிருஷ்ணகுமார் இயக்கி உள்ளார். ஹிந்தி, தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், ராதே ஷ்யாம் திரைப்படத்தின் ஹிந்தி உரிமையை ரூ.120 கோடிக்கு வாங்கியுள்ள பிரபல நிறுவனம், திரைப்படத்தில் ஏற்கெனவே ஒரு டூயட் பாடல் இருந்தபோதிலும், மற்றுமொரு காதல் பாடல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதாம்.

அதனால் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் நடந்து வரும் நிலையில், அடுத்தபடியாக ஊரடங்கு முடிந்த பிறகு மீண்டும் பிரபாஸ் - பூஜா ஹெக்டே நடிக்கும் இன்னொரு டூயட் பாடல் காட்சியை படமாக்க ராதே ஷ்யாம் படக்குழுவினர் தயாராகி வருகிறார்களாம்.

புதுடெல்லி

## கருத்துகளைத் திரும்ப பெறுகிறார் ராம்தேவ்

அலோபதி மருந்துகள் குறித்த தனது சர்ச்சைக்குரிய கருத்துகளை திரும்பப் பெறுவதாக பாபா ராம்தேவ் தெரிவித்துள்ளார்.

யோகா குருவான பாபா ராம்தேவ், சமீபத்தில் நடந்த தனியார் நிகழ்ச்சியில் பேசுகையில், "கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை, ஒட்சிசன் கிடைக்காமல் உயிரிழந்தவர்களை விட, அலோபதி மருத்துவத்தால் இலட்சக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். அலோபதி மருத்துவம் முட்டாள்தனமானது" என்றார். இது, சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு மத்திய சுகாதார அமைச்சர், ராம் தேவின் அலோபதி மருந்துகள் குறித்த கருத்துகளை வாபஸ் பெறும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனையடுத்து, ஹர்ஷ்வர்தனுக்கு பாபா "அலோபதி குறித்த எனது முந்தைய அறிக்கையிலிருந்து பின்வாங்குகிறேன். எனது கருத்துகளால் யாருடைய உணர்வுகளாவது காயமடைந்தால் மிகவும் வருந்துகிறேன் என்றார்.

பெலாரஸ்

# விமானத்தை வலிந்து தரையிறக்கிய பெலாரஸ்

## எதிர்க்கட்சி செயற்பாட்டாளரைக் கைது செய்தது

தாக்குதல் ஜெட் ஒன்றை அனுப்பிய பெலாரஸ் அதிகாரிகள், போலிக் குண்டு எச்சரிக்கை என்பது போன்றதை எழுப்பி றயான் எயார் விமானம் ஒன்றை நேற்று முன்தினம் தரையிறக்கி, பின்னர் விமானத்திலிருந்த எதிர்க்கட்சி ஆதரவு ஊடகவியலாளர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸிலிருந்து லித்துவேனியாவுக்கு பயணித்த விமானமானது திடீரென பெலாரஸ் தலைநைகர் மின்ஸ்குக்கு திசைதிருப்பப்பட்டதுடன், மிக்-29 தாக்குதல் ஜெட்டொன்றால் வழிநடத்தப்பட்டுள்ளது. தரையிறங்கிய பின்னர் ஊடகவியாளர் றொமன் புரோடசெவிச்சை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

டெலிகிராமூடாக கடந்தாண்டு, பெலாரஸ் ஜனாதிபதி அலெக்ஸான்டர் லுகஷென்கோவுக்கெதிரான பாரிய ஆர்ப்பாட்டங்களை குறித்த ஊடகவியலாளர் ஒளிபரப்பியிருந்தார்.

இந்நிலையில், தீவிரவாத குற்றச்சாட்டுக்களுக்காக இவ்வூடகவியலாளர் தற்போது வேண்டப்படுவதுடன், பாரிய கலகங்களை ஒழுங்கமைத்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகிறார்.



லித்துவேனியா வான் பரப்புக்குள் நுழைய இரண்டு நிமிடங்களுக்கு முன்னர் விமானம் திசைதிருப்பப்பட்டுள்ளது. ஏழு மணித்தியாலங்கள் தரையிலிருந்த பின்னர் மேலெழும்பிய விமானமானது லித்துவேனியத் தலைநகர் வில்னியூஸில் தரையிறங்கியிருந்தது.



## குடியேற்றவாசிகள்

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கிழக்கு ஜெருசலேத்திலுள்ள அல்–அக்ஸா வளாகத்துக்குள் பலஸ்தீன வழிபாட்டாளர்கள் இஸ்ரேலியப் பொலிஸாரால் தாக்கப்பட்ட சில மணித்தியாலங்களில் நேற்று முன்தினம் காலையில் கடுமையாக ஆயுதந்தரித்த இஸ்ரேலிய சிறப்புப் படைகள் புடைசூழ யூதக் குடியேற்றவாசிகள் அங்கு சென்றுள்ளனர்.

ஈரான்

# 'அணு முகவரகத்துக்கு இனி அனுமதியில்லை'



ஈரானுக்கும், ஐக்கிய நாடுகளின் அணுக் கண்காணிப்பகத்துக்குமிடையிலான மூன்று மாத கண்காணிப்பு ஒப்பந்தமொன்றானது காலாவதியாகி விட்டதாகத் தெரிவித்துள்ள ஈரானின் பாராளுமன்றத்தின் சபாநாயகர் மொஹமட் பக்கர் கலிபஃப், ஆகையால் சில ஈரான் அணுநிலையங்களுக்குள் இருந்து முகவரகம் புகைப்படங்களை பெறுவது நிறுத்தப்படுமெனக் கூறியுள்ளார்.

நேற்று முன்தின இவ்வறிப்பு காரணமாக ஈரானின் 2015ஆம் ஆண்டு அணு ஒப்பந்தத்தை மீளக் கொண்டுவருவதற்கான ஐக்கிய அமெரிக்காவுக்கும், ஈரானுக்குமிடையிலான நேரடியற்ற பேச்சுக்களின் எதிர்காலம் குறித்து மேலதிக கேள்விகள் எழுந்துள்ளன.

ஐ. அமெரிக்கா

### கொவிட்–19 பரவல் வெளிப்படுத்தப்பட முதல்

# 'வைத்தியசாலையை நாடிய ஆய்வுகூடப் பணியாளர்கள்'

சீனாவின் வுஹான் வைரஸ் நிறுவகத்தின் மூன்று ஆராய்ச்சியாளர்கள், சீனா கொவிட்-19 பரவலை வெளிப்படுத்த முன்னர் கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பரில் வைத்தியசாலைக் கவனிப்பை நாடியதாக, வோல் ஸ்றீட் ஜேர்னல் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.




முன்னர் வெளிப்படுத்தப்படாத ஐக்கிய அமெரிக்க புலனாய்வு அறிக்கையொன்றை மேற்கோள்காட்டியே குறித்த விடயத்தை வோல் ஸ்றீட் வெளியிட்டுள்ளது.

இத்தாலி

# கேபிள் கார் வீழ்ந்ததில் 14 பேர் பலி

வட இத்தாலியிலுள்ள மக்கியோரே நதிக்கருகிலுள்ள மலையொன்றில் கேபிள் காரொன்று நேற்று முன்தினம் வீழ்ந்ததையடுத்து, குறைந்தது ஒரு குழந்தையுட்பட 14 பேர் பலியாகியுள்ளதுடன், இன்னொரு குழந்தை மோசமாகக் காயமடைந்துள்ளது.

பொழுதுபோக்கு நகரான ஸ்ரெஸாவிலிருந்து அருகிலுள்ள பைட்மொன்ட் பிராந்தியத்திலுள்ள மொட்டரரோனே மலைப்பகுதிக்கு பயணிகளை நகர்த்திக் கொண்டிருந்த சேவையின்போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களுள் ஐந்து இஸ்ரேலியர்கள் உள்ளடங்குவதாக அந்நாட்டு வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

கேபிள் அறுந்தமை காரணமாகவே குறித்த விபத்து இடம்பெற்றிருக்கலாமெனக் கருதப்படுகிறது.



பிரித்தானியா

### எதிர்வரும் கோடைப்பருவகாலத்தில்

# திருமணம் முடிக்கவுள்ள பிரதமர் ஜோன்ஸன்?

பிரித்தானியப் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனும், அவருக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணான கரி சிமொன்ட்ஸும் அடுத்தாண்டு ஜூலை 30ஆம் திகதிக்கு திருமண அழைப்புக்களை குடும்பம், நண்பர்களுக்கு அனுப்பியுள்ளதாக த சண் இணையத்தளம் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

எங்கு திருமணம் நடைபெறுகின்றது என்பது கடுமையாகப் பாதுகாக்கப்படும் இரகசியமாகக் காணப்படுவதாக சண் தெரிவித்துள்ளது.

பிரதமர் ஜோன்ஸனும், அவரது நண்பி சிமொன்ட்ஸும் திருமணம் முடிப்பதற்காக தாங்கள் நிச்சயிக்கப்பட்டுள்ளதாக கடந்தாண்டு பெப்ரவரியில் தெரிவித்திருந்தனர்.

பிரதமராக ஜோன்ஸன் பதவியேற்றதிலிருந்து அவரது இல்லத்திலேயே ஒன்றாக சிமொன்ட்ஸ் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



### முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# இலங்கையை வீழ்த்திய பங்களாதேஷ்

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், முஷ்பிக்கூர் ரஹீமின் 84 (87), மகமதுல்லாவின் 54 (76), அணித்தலைவர் தமிம் இக்பாலின் 52 (70), அஃபிஃப் ஹொஸைனின் ஆட்டமிழக்காத 27 (22) ஓட்டங்களோடு, 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், தனஞ்சய டி சில்வா 3, துஷ்மந்த சமீர, தனுஷ்க குணதிலக, லக்‌ஷன் சந்தகான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.




பதிலுக்கு, 258 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை சார்பாக வனிடு ஹஸரங்க மாத்திரமே 74 (60) ஓட்டங்களைப் பெற்றதுடன், வேறெவரும் நிலைத்து நிற்காமல், மெஹிடி ஹஸன் மிராஸிடம் 4, முஸ்தபிசூர் ரஹ்மானிடம் 3, மொஹமட் சைஃபுடீனிடம் 2, ஷகிப் அல் ஹஸனிடம் ஒரு விக்கெட்டைப் பறிகொடுத்து, 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 224 ஓட்டங்களையே பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ரஹீம் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று பிற்பகல் 12.30 மணிக்கு டாக்காவில் ஆரம்பமாகவுள்ளது.

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# அஸ்தன் வில்லாவிடம் தோற்ற செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 1-2 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை பென் சில்வெல் பெற்றதோடு, அஸ்தன் வில்லா சார்பாக, பேர்ட்ரன்ட் ட்ரரோரே, அன்வர் எல் கஸி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், லெய்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 4-2 என்ற கோல் கணக்கில் டொட்டெஹாம் ஹொட்ஸ்பர் வென்றது. டொட்டென்ஹாம் சார்பாக, கரெத் பேல் இரண்டு கோல்களையும், ஹரி கேன் ஒரு கோலையும் பெற்றதோடு,



மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. லெய்செஸ்டர் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜேமி வார்டி பெற்றிருந்தார்.

இதேவேளை, சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், எவெர்ற்றனுக்குமிடையிலான போட்டியில், 5-0 என்ற கோல் கணக்கில் சிற்றி வென்றது. சிற்றி சார்பாக, சேர்ஜியோ அகுரோ இரண்டு கோல்களையும், கெவின் டி ப்ரூனே, கப்ரியல் ஜெஸூஸ், பில் பொடென் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

### பிரெஞ்சு லீக் 1 தொடர்:

# சம்பியனான லில்லி

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில் லில்லி சம்பியனாகியுள்ளது.

அங்கர்ஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றதைத் தொடர்ந்தே லில்லி சம்பியனாகியுள்ளது.

அந்தவகையில், லீக் 1 புள்ளிகள் பட்டியலில் 83 புள்ளிகளை லில்லி அடைந்த நிலையில், இரண்டாமிடத்தில் ஒரு புள்ளி குறைவாக 82 புள்ளிகளுடன் பரிஸ் ஸா ஜெர்மைன் காணப்பட்டது.




### மீண்டும்

# ஒத்தி வைக்கப்பட்ட ஆசியக் கிண்ணம்

கொவிட்-19 பரவல் காரணமாக ஆபத்துகள், கட்டுப்பாடுகள் காரணமாக கடந்தாண்டிலிருந்து இவ்வாண்டுக்கு ஆசியக் கிண்ணம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், எதிர்காலத்தில் திட்டமிடப்பட்ட தொடர்கள் காரணமாக அனைத்து அணிகளும் பங்கேற்கக்கூடியவாறு காலப்பகுதி இவ்வாண்டு இல்லாத நிலையில் மீண்டும் ஆசியக் கிண்ணம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே அடுத்தாண்டு ஆசியக் கிண்ணத் தொடரொன்று இருப்பதால், ஒத்தி வைக்கப்பட்ட ஆசியக் கிண்ணத் தொடரானது 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

ACC ASIAN CRICKET COUNCIL

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சஸூலோவிடம் தோற்ற லேஸியோ

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சஸூலோவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், லேஸியோவுக்குமிடையிலான போட்டியில், 0-2 என்ற கோல் கணக்கில் லேஸியோ தோற்றது.

சஸூலோ சார்பாக, ஜியோர்கொஸ் கிரியகொபௌலஸ், டொமெனிக்கோ பெரர்டி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, நாப்போலியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், ஹெலாஸ் வெரோனாவுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது. நாப்போலி சார்பாக, அமிர் றரஹ்மனியும், வெரோனா சார்பாக டேவிடே பரோனியும் கோல்களைப் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், இப்ஸியாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், றோமாவுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது. றோமா சார்பாக, ஸ்டீபன் எல் ஷராவி, ஹென்றிக் மிகித்திரயான் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இப்ஸியா சார்பாக, டேனியலி வேர்டி, டொம்மஸோ பொப்கியா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



இதேவேளை, அத்லாண்டாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் வென்றிருந்தது. ஏ.சி மிலன் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் பிராங்க் கெஸி பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 25 மே 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.